மாலை 47 மணி 1 ஜனவரி 2005 விலை ரூ.10

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

தைப்பொங்கல் ஒருநாள்மட்டும் பகலில் திறந்திருக்கும் ஆலயம்

சுபகாரிய வெற்றிதரும் சூரியனார் கோயில்

பத்மஸ்ரீ சில்பகலாமணி முத்தையா ஸ்தபதி அவர்களுடன்பேட்டி

வானக்குயிலாய்ப் பறந்த கானக்குயில்
- "நாதப்பிரம்மம்" குன்னக்குடி வைத்தியநாதன்

கடமைதவறா கருநிறத்தான்
- ஏம்.எம்.ஆர். கட்டுரைத் தொடர் ஆரம்பம்

பூஜை
- "எழுத்துச்சித்தர்" பாலகுமாரன்

அருள்மிகு சூரிய நாராயணர்

சூரியனார்கோவில்

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை

மருத்துவ சேவை : எஸ்.என்.ஆர். சன்ஸ் அறநிறுவனம்
புற்றுநோய் மருத்துவத்துறை
395, ஆவாரம்பாளையம் ரோடு, சித்தாபுதூரர் - 641 044.
தொலைபேசி எண்கள் : 0422-5300203, 5389797, பேக்ஸ் : 2210521

தென் தமிழகத்தில் முதன் முறையாக சி.டி. ஸ்கேனுடன் இணைக்கப்பட்டுள்ள லீனியர் ஆக்சிலரேட்டர் கதிர்வீச்சு கருவி. ரூ.6 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள இக்கருவி புற்றுநோய் திசுக்களை மட்டும் தனிமைப்படுத்தி தாக்கக்கூடியது.



தமிழகத்தில் முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ள ரூ.2.5 கோடி மதிப்பிலான தெரட்ரான் 780 E கதிர் வீச்சு சிகிச்சை கருவி.



மிக நுட்பமான உட்கதிர் வீச்சு சிகிச்சைக்காக ரூ.2.5 கோடி மதிப்பில் அமைந்துள்ள மைக்ரோ செலக்ட்ரான் கர்பப்பை புற்று நோய், நுரையீரல் புற்று நோய் மற்றும் உணவுக் குழாய் புற்று நோய் ஆகியவற்றிற்கான அதி நவீன சிகிச்சைக் கருவி.



முப்பரிமான கதிர்வீச்சு சிகிச்சை திட்டமிடல் சி.டி. ஸ்கேனுடன் இணைக்கப்பட்டுள்ளது. புற்றுநோய் தாக்காத திசுக்களை கதிர்வீச்சு தாக்காமல் பாதுகாக்கும். ரூ.1 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய அனைத்து வசதிகளுடன் கூடிய சர்வதேச தரம் வாய்ந்த புற்றுநோய் சிகிச்சை மையம், புற்றுநோய் சிகிச்சை பிரிவுகளில் சிறப்பு பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணர்களைக் கொண்டு செயல்படுகிறது.

நிர்வாக அறங்காவலர்

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2036 | தாரண - தை
மாலை-47 | மணி -1 | ஜனவரி 2005

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம். 2004 ஆம் ஆண்டு நல்லபடி விடைபெற்று 2005ஆம் புத்தாண்டு மேன்மேலும் இன்பங்களைக் குவிக்கும் என்ற பெருநம்பிக்கையோடு நாம் அனைவரும் புத்தாண்டையும், பொங்கலையும் எதிர்நோக்கியிருந்த வேளையில், யாவரும் எதிர்பாராத வண்ணமாய், இந்துமாப் பெருங்கடல் இந்தோனேஷியாவை மையம் கொண்டு பொங்கி விட்டது.

தொலைக்காட்சிகளிலும், செய்தித் தாள்களிலும் இடம்பெறும் இந்த அவலக் காட்சிகளைக் கண்டு, சொல்லொணா அதிர்ச்சிக்கு ஆளாகி இன்றைக்கு உலக நாடுகள் பலவும் தத்தளிக்கின்றன.

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இருக்கண் களைவதாம் நட்பு"

என்ற பொய்யாமொழிப்புலவரின் குறள் கருத்திற்கு இணங்க, நம் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் பூகம்பப் பாதிப்பு ஏற்பட்ட இடங்களுக்கெல்லாம் ஓடிச் சென்று உதவிக்கரம் நீட்டிவருகிறார்கள்.

ஏற்பட்ட இழப்பு ஈடுசெய்யவே முடியாத ஒன்றுதான். இருப்பினும், மாபெரும் மனிதநேயத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் உதவிக்கரம் நீட்டுவோம். வழியும் கண்ணீரை வாஞ்சையோடு துடைத்து மறுவாழ்வு பெற வழிகாட்டுவோம்.

இத்தகைய புத்துணர்வோடு, புதுநம்பிக்கையோடு பிறக்கும் 2005ஆம் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை நாம் எதிர்கொள்வோமாக!

புத்தாண்டு மற்றும் பொங்கலைச் சிறப்பிக்கும் இவ்விதழில் ஆதவனைப் போற்றும் வண்ணம் சூரியனார் கோயில் கட்டுரையும், திருவள்ளுவராண்டு தொடங்குகிறோமாதலால் அவர் குறித்த அமரர் முத்தமிழ்க் காவலர் எழுதிய கட்டுரையும் இவ்விதழில் சிறப்பிடம் பெற்றுள்ளன. திரு ஏ.எம்.ஆர்., 'எழுத்துச்சித்தர்' பாலகுமாரன் ஆகியோரின் முத்திரைக் கட்டுரைகள், செங்கரும்பும், சர்க்கரைப் பொங்கலும் எனத் தித்திக்கின்றன. ஆண்டுத் தொடக்கத்தில் அஷ்டலஷ்மியரின் அருளாசியினை அனைவரும் பெற வேண்டி அதனை வண்ணப்படமாகவும் இடம்பெறச் செய்துள்ளோம்.

இயற்கைச் சீற்றங்களால் இயற்கை எய்திய அனைத்து உயிர்களும் மோட்சகதி வேண்டிப் பிரார்த்திக்கும் அனைத்து நல்ல உள்ளங்களோடும் நமது அறநிலையத்துறையும் இணைந்து பிரார்த்திக்கிறது. இன்னும் வாழும் உயிர்களான நாம், புதியதோர் உலகைச் செய்ய வேண்டிய அரும்பெரும் கடமை கருதி, துன்பங்களைத் தாங்கும் திறன்வேண்டி, புதிய தெம்புவேண்டி இறையருளைப் பிரார்த்திப்போமாக.

அனைவருக்கும் இப்புத்தாண்டு, பொங்கும் நல்வாழ்வுதனை நல்கட்டும் என எல்லாம் வல்ல இறையருளை வேண்டுகிறேன்.

அன்புள்ள

ஜி. இராமகிருஷ்ணன் இ. ஆ. ப.,
ஆணையாளர்,

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119 உத்தமர் காந்தி சிலை, சென்னை - 600 034.

இதழின் உள்ளே...

1. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அன்னதானத்திட்டத்திற்கு மூன்றுமாதச் சம்பளம் நன்கொடை 2
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவரங்கம், சமயபுரம் திருக்கோயிலுக்கு வருகை 3
3. தைப் பொங்கல் ஒருநாள்மட்டும் பகலில் திறந்திருக்கும் ஆலயம் 3
4. சுபகாரிய வெற்றிதரும் சூரியனார் கோயில் 4
5. நியாயம் வழங்கும் நீதிதேவர் அருள்மிகு கொளஞ்சியப்பர்-முனைவர் **இரா.செல்வகணபதி** 6
6. குறள் காட்டும் வாழ்வு -முத்தமிழ் அறிஞர் **கி.ஆ.பெ.விஸ்வநாதம்** 9
7. பத்மஸ்ரீ சில்பகலாமணி **முத்தையா ஸ்தபதி** அவர்களுடன் ஒரு பேட்டி 13
8. ஆனந்தம் தரும் அனந்தமங்கலம் ஆஞ்சநேயர் - முனைவர் **த. அகரமுதல்வன்** 16
9. காலச்சுவடுகள் - விவேகானந்தர் கொண்டாடிய பார்த்தசாரதி 18
10. பூஜை - "எழுத்துச் சித்தர்" **பாலகுமாரன்** 19
11. தமிழிசை வளர்த்த சீர்காழி மூவர்-**பு.ஏ.இராமையா**, இ.ஆ.ப. 22
12. கேள்வி - பதில் 24
13. தியாகபிரம்மம் - **ஜெயஉத்திரன்** 25
14. திருமந்திர உபதேசம் - திருமந்திரச் செம்மல் **டி.வி.வெங்கட்ராமன்** இ.ஆ.ப (ஓய்வு) 29
15. மகாபாரதம் - முனைவர் **த. அமிர்தலிங்கம்** 32
16. உலகுக்குநலம் தரும் ஒரு மந்திரம் - **சு. குஞ்சிதபாதம்** 35
17. வானக்குயிலாய்ப்பறந்த கானக்குயில் - நாதப்பிரம்மம் குன்னக்குடி **வைத்தியநாதன்** 37
18. கடமைத் தவறா கருநிறத்தான் -**ஏ.எம்.ஆர்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அன்னதானத் திட்டத்திற்கு மூன்று மாதச் சம்பளம் நன்கொடை

2004 ஆம் ஆண்டிற்கான ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய மூன்று மாதங்களுக்குரிய தமது சம்பளம் மொத்தம் ரூபாய் முப்பதாயிரத்தை மூன்று திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக 6.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் திரு ஆர். முத்துசாமி ரூ. 10 ஆயிரத்திற்கான காசோலையைப் பெற்றுக் கொண்டார்.

திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் திரு பாரதி காசோலையைப் பெற்றுக் கொண்டார்.

திருச்சி மாவட்டம், குணசீலம் அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயில் பரம்பரை நிர்வாக அறங்காவலர் திரு கே.ஆர்.பிச்சுமணி அய்யங்கார் காசோலையைப் பெற்றுக் கொள்கிறார்.

மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் திருக்குளத் திருப்பணி ரூ.27 லட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் 13.12.2004 அன்று இதனைத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில்,
சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்களுக்கு
14.12.04 அன்று வருகை தந்து வழிபட்டார்கள்.

தைப் பொங்கல் ஒருநாள்மட்டும் பகலில் திறந்திருக்கும் ஆலயம்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக் கோட்டை வட்டம் பரக்கலக் கோட்டையில் அருள்மிகு பொதுஆவுடையார் (ஸ்ரீமத்திய புரீஸ்வரர்) திருக்கோயில் உள்ளது.

அவ்விருவருக்குமிடையே ஒரு கருத்துப் போர் உண்டானது. அக்கருத்துப்போரின் பொருள் இது தான்: **"இல்லறம் சிறந்ததா? துறவறம் சிறந்ததா"**

இல்லறமே சிறந்ததென வாதம் செய்தார் ஸ்ரீ வானுகோபர். இல்லை இல்லை துறவறமே சிறந்ததென வாதம் செய்தார் ஸ்ரீமகாகோபர்.

இருகோபர்களும் இவ்வாறு கோபித்து வாதிட இவர்களை மத்தியஸ்தம் செய்துவைக்க ஒரு சோமவாரம் அன்று இரண்டாம் ஜாமத்தின் போது இவ்விரு முனிவர்களும் வாதிட்ட பரக்கலக் கோட்டை வெள்ளால மரத்திற்கே எழுந்தருளிப் போந்தார் பொன்னார் மேனியராம் ஸ்ரீ நடராஜபெருமான்.

"இல்லறமே நல்லறம்! ஒழுக்கம் மிக்கதாயின் துறவறமும் நல்லறமே! இரண்டுமே ஏற்றமான நெறிகளே" என்று மத்தியஸ்தம் செய்து வைத்த படியால் இறைவருக்கு "ஸ்ரீமத்தியபுரீஸ்வரர்" எனத் திருப்பெயர் உண்டானது.

"ஸ்ரீ மத்திய புரீஸ்வரர்" ஆகிய அருள்மிகு பொது ஆவுடையார், வெள்ளாலமரத்தில் சோமவாரத்தில் இரவு இரண்டாவது ஜாமத்தில் தோன்றித் திவ்விய தரிசனம் தந்தருளியபடியால் இங்கு ஒவ்வொரு சோமவார இரவும் இரண்டாம் ஜாமத்தில் மட்டும் சிறப்பான பூஜை செய்து வழிபாடு நிகழ்த்தப்படுகிறது.

கார்த்திகை மாதத்தில் சோமவார வழிபாடு இரவு இரண்டாம் ஜாமத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறும்.கார்த்திகை கடைசி சோமவாரத்தில் நடைபெறும் ஆண்டு உற்சவத்தில் இரண்டாம் ஜாமப் பூசை நடைபெற்ற பின்பு விடியற்காலை சூரியோதயம் வரை மக்கள் தரிசனத்திற்காக சந்நிதி திறந்திருக்கும். கார்த்திகை கடைசி சோமவாரத்தின் போது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இரவில் வந்து ஸ்ரீமத்திய புரீஸ்வரருக்கு அர்ச்சனை செய்து மாவிளக்கு ஏற்றி வழிபடுவார்கள். பக்தர்களின் வசதிக்காகத் தற்காலிகக் கடைகள் பல நிறுவப்பட்டு இருக்கும்.

இவ்வாறு இரவு வழிபாடு மட்டுமே சிறப்புற நடைபெறும் இத்திருக்கோயிலில் ஆண்டுக்கொரு முறை **பொங்கல் பண்டிகை தை முதல் நாளன்று மட்டும்** பகலில் ஆலயம் திறக்கப்பட்டு சூரியோதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை வழிபாடு நடப்பது ஒரு குறிப்பிடத்தக்க அதிசயம் எனலாம்.

சுபகாரிய வெற்றிதரும் சூரியனார் கோயில்

அமைவிடம் : கும்பகோணம் - மயிலாடுதுறை வழித்தடத்தில் ஆடுதுறையில் இருந்து 3.கி.மீ தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உண்டு.

இறைவன் : அருள்மிகு சிவசூரிய நாராயண சுவாமி பெருமான். இறைவி : அருள்மிகு சாயாதேவி. உஷாதேவி. தலவிருட்சம் : வெள்ளெருக்கு, தல தீர்த்தம் : சூரிய புஷ்கரணி

தலவரலாறு : இமயமலையில் வாழ்ந்த காலவ முனிவர் என்பவர் முக்காலமும் உணர்ந்தவர். தனக்குத் தொழுநோய் ஏற்படப் போவதை முன்கூட்டியே அறிந்த அவர் நவக்கிரகங்களை நோக்கித் தவம் இருந்தார். அதன் பயனாக நவக்கிரக நாயகர்கள் அவர் முன் தோன்றி அவர் வேண்டிய வரத்தைக் கேட்டு அளித்தனர்.

இதனை அறிந்த பிரம்மதேவர் சினம் கொண்டு நவக்கிரகங்களைப் பூலோகத்தில் அவதரிக்கு மாறும் தொழுநோய் பீடிக்கப்பட்டு உழலுமாறும் சாபமிட்டார். சாபம் பெற்ற நவநாயகர்கள் மனம் வருந்தி பிரம்மனிடம் வேண்ட, பிரமனும் நவநாயகர்களை பூலோகத்தில் காவிரி நதிக்கரையில் உள்ள அர்க்கவனத்தில் கார்த்திகை முதல் ஞாயிறு முதல் 12 ஞாயிறு தவம் செய்து திங்கட்கிழமை வைகறைப்பொழுதில் சிவபெருமானை வழிபட்டு, உதயாதி ஏழுநாழிகைக்குள் வெள்ளை எருக்கு இலையில் தயிர் அன்னத்தை இட்டு உண்டால் சாபம் நீங்கும் என்று அருளினார். அதன்படி நவநாயகர்கள் தவம் இருந்து சாபம் நீங்கினர். சூரியனை முதன்மையாகக் கொண்டு நவகோள்கள் இங்கு தவம் புரிந்ததால் இத்தலத்தில் நவகோள்களுக்கும் ஆலயம் ஏற்பட்டு சூரியனார் கோயில் என்று பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

வழிபட்டுப் பேறு பெற்றோர். : இத்தலத்திற்கு வந்து தங்கியிருந்து சூரியபகவானை பரிட்சித்து மகாராஜா, சந்திர பகவானைச் சித்ராங்கத பாண்டியன், அங்காரக பகவானைப் புரூரவசு, புத பகவானைச் சோமசன்மன், குருபகவானை இந்திரன், சுக்கிர பகவானை தூமகேது, சனீஸ்வரனை நளமகாராஜன் ஆகியோர் முறையாக வழிபட்டு தோஷங்கள் நீங்கப் பெற்றனர்.

தரிசன முறை : இவ்வாலயத்தில் நவநாயகர்கள் வாகனமும், ஆயுதமும் இன்றி இரண்டு கரங்களுடன் அமைதியாகப் புன்னகை தவழும் முகத்துடன் அனுக்கிரக மூர்த்திகளாகக் காட்சி தருகின்றனர். கோபுர தரிசனம் செய்து இவ்வாலயத்தில் நுழைந்ததும் முதலில் கோள் தீர்த்த விநாயகரையும், அடுத்து விசுவநாதர் விசாலாட்சி அம்பாளையும் வழிபட வேண்டும். பின்பு சூரியனுடன் உஷா, பிரத்யுஷா தேவிகளையும் எதிரில் காட்சி தரும் குருபகவானையும் வழிபடவேண்டும். அடுத்துத் தென்சுற்றில் கீழே இறங்கி சனீஸ்வரன், புதன், அங்காரகன், சந்திரன், கேது, சுக்கிரன், ராகு முதலிய சுற்றுக் கோயில்களுக்குச் சென்று வழிபடவேண்டும். பிறகு சென்ற வழியே திரும்பி, கோள் தீர்த்த விநாயகரிடம் வந்து குறைகளை சொல்லி வேண்டிக் கொண்டு கொடி மரத்தின் பீடந்தொட்டு, ஒன்பது சுற்றுக்கள் வலமாக வந்துபீடத்தின் முன்பு ஆடவர்கள் அஷ்டாங்கமாகவும், மகளிர் பஞ்சாங்கமாகவும் வடக்கு பக்கம் தலை வைத்து வணங்க வேண்டும்.

தோஷ நிவர்த்தி : ஏழரை ஆண்டுச் சனி. அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனி உள்ளவர்களும், நவக்கிரக தோஷம் உடையவர்களும் இத்தலத்திற்கு வந்து சுமார் இரண்டரை மாத காலம் அதாவது தொடர்ச்சியாக பன்னிரெண்டு ஞாயிற்றுக்கிழமை வரை தலவாசம் இருந்து நவதீர்த்தங்களில் நீராடித் திருமங்கலக்குடி பிராணநாதரையும், மங்களாம்பிகையையும், நவகோள்களையும் முறைப்படி வழிபாடு செய்யின் தோஷங்கள் நீங்கப் பெறுவர் என்பது உறுதி.

களத்திர தோஷம், விவாகப் பிராப்த தோஷம், புத்திர தோஷம், புத்திரப் பிராப்த தோஷம், வித்தியாப் பிராப்த தோஷம் உடையவர்களும், சூரிய திசை, சூரிய புத்தி உடையவர்களும் இத்தலத்திற்கு வந்து வழிபட்டால் தோஷம் நீங்கும். அனுக்கிரகம் உண்டாகும். சுபகாரிய வெற்றி உண்டாகும். ★



ஆலயம்* தொழுவது சாலவும்* நன்று.

ஆரோக்கியம்* அறிவது ஆயுளுக்கு நன்று.

- அப்போலோவின் முழு உடல் பரிசோதனைகள்
- அப்போலோ முழு உடல் பரிசோதனை
- அப்போலோ எக்ஸிக்யூட்டிவ் ஹெல்த் பரிசோதனை
- அப்போலோ இருதய பரிசோதனை

மேலும் விபரங்கள்
முன் அனுமதிக்கு :
வரவேற்புத்துறை :
போன் : 0452 - 2589904



அப்போலோ சிறப்பு மருத்துவமனை

மதுரை

24மணிநேர அவசர சிகிச்சை, ஆம்புலன்ஸ் உதவிக்கு : Ph : 1066, 0452 - 2581111

முனைவர் இரா.செல்வகணபதி

நியாயம் வழங்கும் நீதிதேவன் அருள்மிகு கொளஞ்சியப்பர்



திருமுருகன் கோயில் கொண்டுள்ள பிரார்த்தனைத் திருத்தலங்களில் மிகப் புகழ் பெற்ற திருத்தலம் விருத்தாச்சலம் வட்டம், மணவாளநல்லூரில் அமைந்துள்ள அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில் ஆகும். இத்திருத்தலத்தில் தமிழ் கடவுள் முருகன் உருவம் இன்றி அருவ நிலையில் எழுந்தருளி அருள்பாலித்து வருவது மிகச்சிறப்புடையதாகும்.

பக்தர்களின் வினை தீர்க்கும் வடிவேல் முருகன் இங்கு தன்னை அணுகியவர்களுக்கு தீரா நோய் தீர்க்கும் கண்கண்ட தெய்வமாக விளங்குகிறான். பிறரிடம் பொருள் கொடுத்து நம்பி மோசம் போனவர்களும், பகைவர்களால் துன்பப்படுபவர்களும் எழுத்து மூலம் தங்களது குறையை தெரிவித்து முறையிட அவர்களின் கோரிக்கைகளை ஏற்று நியாயம் வழங்கும் நீதிதேவனாகவும் அருள்மிகு கொளஞ்சியப்பர் அருள்புரிவது இத்திருத்தலத்திற்கே உள்ள தனிச்சிறப்பு எனலாம்.

சுமார் அறுபது, அல்லது எழுபது ஆண்டுகளுக்கு முன், தற்போது கொளஞ்சியப்பர் கோயில் கொண்டுள்ள நெடுஞ்சாலையை ஒட்டிய மணவாளநல்லூர் பகுதி, காட்டுச் செடிகளும், மரங்களும் அடர்ந்து வளர்ந்த வனப்பகுதியாகவே விளங்கியிருந்துள்ளது. இருட்டிய பிறகு அப்பகுதிக்குச் செல்வதற்கே மக்கள் அஞ்சுவர். பகலில் மாடுமேய்க்கும் இடமாகவே விளங்கியுள்ளது.

விருத்தாசலம் - சேலம் பெருந்துத்தடத்தில் இன்று கோயில் அமைந்திருக்கும், இடத்திற்குத் தெற்கே, இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் தான் மணவாளநல்லூரின் மக்கள் வாழும் பகுதி அமைந்துள்ளது. அவ்வூரின் வடக்கில், கிராமத்தின் எல்லையாகச் சாலை ஓரம், அமைந்த காட்டுப் பகுதியிலிருந்தே, அருள்மிகு. கொளஞ்சியப்பர் வெளிப்பட்டார். இது பற்றி வழங்கும் ஐதிகச் செய்தி மிகவும் சுவையானது.

இந்தியத் திருநாட்டில் இந்துப் பெருமக்களால் பெரிதும் போற்றிக் கொண்டாடப்படும் விலங்கு பசுவாகும். இதனைத் தெய்வீகம் நிறைந்ததாகக் கருதி வணங்குவது நமது மரபு. கோமாதா என்று, மக்கள் இதனைப் போற்றுவர். தேவர்கள், காமதேனுவாகப் போற்றி கொண்டாடுவர். திருக்கோயில்களில் நித்திய பூஜைகளோடு, கோபூஜை நிகழ்த்துதலும் உண்டு. பசு பூசித்த தலங்களும் தமிழகத்தில் பல உண்டு. பசுவால் பெயர் பெற்ற நகரங்களும் உள்ளன. காட்டுப்பகுதியில், மறைந்துறைந்த கொளஞ்சியப்பர் வெளிப்பட ஒரு பசு காரணமாக அமைந்தது என்பது வியப்பூட்டும் செய்தியாகும்.

மணவாளநல்லூர் காட்டுப்பகுதியில், கருங்கல்லால் அமைந்த சிறிய பீடம் புதர்களின் இடையே மறைந்து கிடந்தது. கலியுக தெய்வமான கந்தப்பெருமான், அப்பீடத்தில் எழுந்தருளி, மக்களுக்கு அருள் வழங்கத் திருவுளங்கொண்டான். ஒருநாள், மாடுமேய்க்கும் சிறுவர்கள், மேய்ப்பதற்காக ஓட்டிக் கொண்டு வந்து அப்பகுதியில் மேயவிட்ட, பசுக்கூட்டத்திலிருந்து ஒரு பசு, மந்தையைவிட்டுப் பிரிந்து, தனியே புதர் மண்டிய பகுதியில் சென்று மேய்ந்து திரும்பியது.

முதலில் அதைச் சாதாரணமாகக் கருதியிருந்த அச்சிறுவர்களில் ஒருவன் நாளும் ஒரு பசு மட்டும் தனியே பிரிந்து , குறிப்பிட்ட ஒரு இடத்தில் மேய்வதைக் கவனித்து வந்தான். அண்மையில், கன்று ஈன்ற அப்பசுவின் செயல், அவனுக்கு விநோதமாகத் தோன்றிற்று. மற்றைய சிறுவர்களிடம், அவன் இதனைக் கூற, அனைவரும் அதன் உண்மைகாண, ஒருநாள், அப்பசுவைப் பின் தொடர்ந்தனர். பசுவின் கண்ணில் படாது

மறைந்திருந்தனர். சிறிது நேரம், அப்பகுதியில் மேய்ந்த பசு சிறிது தூரம் நடந்து ஓரிடத்தில் ஆடாது அசையாது நின்றது.

என்ன வியப்பு! கன்று முட்டாமல் கறப்பார் இல்லாமல், மனம் குழைந்து நின்ற, பசு மடியிலிருந்து பால், காம்புகள் வழியே பீரிட்டது. கண்டவர்கள் கண்கள், அகல விரிந்தன. மெய்சிலிர்த்தனர். வியப்போடு நடந்ததை ஊரவர்களுக்கெல்லாம் கூறினர். அனைவரும் ஒருங்கு திரண்டு மறுநாளும் சென்று மறைந்து நின்று அதே காட்சி கண்டு, வியப்பெய்தினர். பசு அகன்ற பின் பயபக்தியுடன் அருகில் சென்று பார்த்தனர்.



புதர்களுக்கு இடையே, கருங்கல் பீடம் ஒன்று, ஆவின் பாலால் அபிடேகிக்கப்பட்டு, ஒளிவீசிக் கிடக்கக் கண்டனர். அப்பகுதியே, விளக்கமுற்றுத் திகழ்ந்தது. இது வெறும் பீடம் அன்று. தெய்வம் ஒன்று இதில் ஆவேசித்திருக்கிறது என்று உணர்ந்தனர். செடி,கொடிகளை அகற்றினர். தரையிலிருந்து சுமார் 2அடி உயரத்தில் அமைந்திருந்த பீடத்தில் கோயில் கொண்டுள்ள பெருமான் யார் எனத் திகைத்தனர். ஆவின்பால் அபிடேகம் கொண்ட ஐயன், அபிடேகப் பிரியனாகிய முருகப் பெருமானே என்று, உளங்கொண்டனர்.

"அப்பனே! முருகா" என்று அன்புடன் வணங்கினர். ஊர்மக்களுக்கு இச்செய்தி பரவியது. மணவாளநல்லூராரும், விருத்தாச்சலத்தினரும், கூட்டம் கூட்டமாக வந்து, பீடவடிவில் தன் கோலம் காட்டாது. கரந்து உறையும் கந்தனை இனங்கண்டு போற்றினர். சிறுகொட்டகை அமைத்துக் கோயில் செய்தனர். கொளஞ்சி அப்பா! எனக் கூறித் துதித்தனர்.

மணவாளநல்லூரில் இவ்வாறு கோயில் கொண்டு அருள்வழங்கும், குறிஞ்சித் தலைவனாகிய கொளஞ்சியப்பருக்கு நிகழ்த்தப்படும் ஒருவகை நேர்த்திக்கடன் பிற இடங்களில் இல்லாத, வித்தியாசமானதும், வியப்பூட்டும் தன்மையானதுமாகும். கொளஞ்சியப்பர் சந்நிதியில் மகாமண்டபத்தின் இடப்பாகம், வடக்கு நோக்கிக் கோயில் கொண்டுள்ளார் அருள்மிகு முனியப்பர். காண்போருக்குச் சற்றே அச்சம்தரும் திருமேனி. இவர் எழுந்தருளியுள்ள இடத்தின் கீழே தரைமட்டத்தில் வாழைமொட்டுப் போன்ற அமைப்பில் ஒரு கல் நின்றது.

பல ஆண்டுகளுக்கு முன், அக்கல் அருகில் செல்வதற்கே மக்கள் அஞ்சுவர். ஒழுக்கக் குறைபாடு, தவறு இழைத்தல், தீட்டு உடையோர் அருகில் சென்று அதனை உற்றுப் பார்த்தால் சிலருக்கு சிரிப்பது போல் தோன்றும், சிலருக்கு அச்சமூட்டும். சிலர் அலறிப்புடைத்து ஓடும்படிச் செய்யும். சிலர் கண்டு நடுங்கி குளிர்சுரத்திற்கு ஆளாவர். இன்று அக்கல் இருந்த பகுதி மூடப்பட்டுள்ளது. அருள்மிகு முனியப்பர் அருகில் காட்சி தருகிறார். அவர் சந்நிதிக்கு நேர் எதிரே முன்னரே குறித்தவாறு கல்லாலும், இரும்பாலும் இயற்றப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட முத்தலைச் சூலங்களும், குத்தீட்டிகளும், பிறவகை அம்புகளும் மேல்நோக்கியவாறு நெருக்கமாக நட்டு வைக்கப் பெற்றுள்ளன.

ஒருவரின் பொருள் களவு போய்விட்டால், ஒருவர் தம் உடமைகளை மற்றவர் அபகரித்துக் கொண்டால் தமக்கு ஒருவர் தீங்கு செய்தால், அடித்தால், துன்புறுத்தினால் நீதி வேண்டி முன்பெல்லாம், ஊர்ச்சபையில் வழக்குத் தொடருவர். அரசர்கள் காலத்தில் நீதிவேண்டி மன்னர்க்கு விண்ணப்பம் செய்வர். தற்காலத்தில், வழக்கின் தன்மைக்கு ஏற்ப, காவல்நிலையத்திலும், நீதிமன்றத்திலும் தம் குறை நீங்க ஆவன செய்ய, எழுத்து மூலம் வேண்டுகோள் வைப்பர்.

திருநாவுக்கரசர் உணர்த்தும் உழவு

மனித மனம் என்னும் நிலத்தில்சத்தியம் பேணுதலாகிய உழவு செய்யப்பட வேண்டும்.
பக்தி என்னும் விதையை விதைத்தல் வேண்டும்.
பொய்மை ஆகிய களையைக் களைதல் வேண்டும்.
பொறுமை ஆகிய நீரைப் பாய்ச்ச வேண்டும்.
ஐம்புலன்களால் கவரப்படாமல்
அரும்பண்புகளாம் வேலியிட்டுக் காவல் செய்ய வேண்டும்.
இவ்வாறு செம்மையாய் உழவுத் தொழில் செய்ய, சிவகதியாகப் பயிர் விளையும் என்று அறிவுறுத்துகின்றார் திருநாவுக்கரசர்.

கொளஞ்சியப்பர் அருள் வழங்கும் கருணையாளன், வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கும் அருள்கொடையாளன். தம் அன்பர்களைத் துன்புறுத்துவார்க்கு உரிய தண்டனை வழங்கும் நீதி அரசன், அருட் கருணையோடு, மறக்கருணையும் வழங்கும் மாண்பினன்.

தம் குறை முடிக்க வேண்டி "பிராது கட்டுதல்" என்ற நேர்த்திக் கடன், இங்கே மிகவும் புதுமையாக உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வந்த சொல் வழக்குகளில் ஒன்று "பிராது கொடுத்தல்" என்பது. ஒருவர் மேல், ஒரு வழக்கை எழுத்து வடிவில் நீதி மன்றத்தில் பதிவு செய்தலை, இத்தொடர் குறிக்கும். மணவாளநல்லூரில், தம் குறை முடிக்க வேண்டிக் கொளஞ்சியப்பரிடம், பிராது கட்டுதல் என்ற வழக்கம். இன்றும் மிகுதியாக உள்ளது. பிராது கட்டுதல், வழக்கு நோக்கில் மட்டுமல்லாது, ஒரு குறை முடிக்க வேண்டியும், இங்கே அமைகிறது. பொருள் களவு போய்விட்டாலோ, கொடுத்த கடன் திரும்பாவிட்டாலோ, பிறர், தம்மை வஞ்சித்து விட்டாலோ, கடும் நோயால் அவதி உற்றாலோ, குடும்பப் பிரச்சனைகளால் வாடினாலோ, மகனுக்கோ, மகளுக்கோ திருமணம் தடைப்பட்டாலோ, வேலை கிடைக்காது, வறுமை உற்றாலோ, வேறு யாதொன்று வேண்டி நின்றாலோ, யாவற்றையும் இங்கே பிராது கட்டி விண்ணப்பித்துக் கொள்ளலாம்.



நீதி மன்றத்தில் பிராது கொடுத்தால், பிரதிவாதிக்குச் சம்மன் அனுப்புவர். ஊரைக் கூட்டத் தமுக்கு முழக்கி, நமக்கு அறிவிப்பர். இவற்றிற்கான கட்டணத்தை பிராது கொடுப்பவர் செலுத்த வேண்டும். கொளஞ்சியப்பராகிய அரசர் முன், சம்மன் கட்டுவதற்கும் கட்டணம் உண்டு. இங்கே பிராதுக் கட்டணம் ரூபாய் பத்தும், பைசா பத்தும் ஆகும். இத்தொகை - 1. பிராதுக்கட்டணம் 2. சம்மன் கட்டணம் 3. டாம்டாம் (தமுக்கு) கட்டணம் ஆகிய மூன்றிற்கும் சேர்ந்ததாகும். இக்கட்டணத்துடன் பிராது கட்டுபவர், எந்த ஊரில் இருந்து மணவாளநல்லூர் வருகிறாரோ அந்த ஊருக்கும் மணவாளநல்லூருக்கும் இடையே உள்ள தூரத்தைக் கிலோமீட்டர் கணக்கிட்டு, ஒரு கிலோமீட்டருக்குப் பத்துகாசு வீதம் தமுக்குக் கட்டணத்தோடு சேர்த்துக் கட்டி, அலுவலக இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

பிராது வாசகத்தை ஒரு வெள்ளைத்தாளில் கீழ்கண்டவாறு தொடங்கி எழுத வேண்டும்.

"மணவாளநல்லூர், அருள்மிகு கொளஞ்சியப்பர் திருப்பாத கமலங்களைப்பணிந்து திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வடபாதி மங்கலத்தைச் சேர்ந்த இராமசாமிப்பிள்ளை குமாரனாகிய சண்முகமாகிய நான் என்னுடைய குறைகளைக் கீழ்க்கண்டவாறு பிராது மூலம் திருவடிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்கிறேன்".

என்று தொடங்கி, முடிக்க வேண்டிய குறைகளை அடுத்து எழுதி, நிறைவாகக் கையொப்பம் இட்டு, தேங்காய், பழம் முதலியவற்றோடு ஒரு அர்ச்சனைத் தட்டில், இப்பிராதுக் கடிதத்தையும் மடித்து வைத்துக் கொளஞ்சியப்பர் சந்நிதியில், சிவாசாரியாரிடம் வழங்க வேண்டும்.

அவர் அர்ச்சனை செய்து பிராதுக் கடிதத்தைச் சுவாமி பாதத்தில் வைத்து வழிபட்டு பிரசாதத்துடன் மீண்டும் நம்மிடம் தருவார். நாம் அக்கடிதத்தைப் பல்வேறு குறுக்கும் நெடுக்குமாக மடித்து ஒரு சிறு விபூதிப் பொட்டலம்போல் ஆக்கிச் சிறு நூலில் கட்டி, அதனை முனியப்பர் சந்நிதியில் இருக்கும் வேலில் ஒரு நூலால் கட்டித் தொங்க விட்டுவிட்டு விடை பெறலாம்.

கொள்ஞ்சியப்பர் அருள், அவரவர் நல்வினைக்கு ஏற்ப, மூன்று மணி நேரத்திலோ, மூன்று நாளிலோ, மூன்று மாதத்திலோ வெளிப்படும். பிராது கட்டியவர் எண்ணம் நிறைவேறும். இன்றும், இங்கே, பிராது கட்டுபவர்கள் தொகை ஏராளம். நலம் பெற்றவர்கள் ஆயிரம் ஆயிரம். ஆண்டொன்றுக்கு இவ்வகையில் கட்டணமாகவே ஒருலட்சம் ரூபாய்க்கு மேல், திருக்கோயிலுக்கு வருவாய் அமைகிறது. எனின் பிராது கொடுப்பார் தொகையை ஒருவாறு அறிய இயலும். எண்ணம் நிறைவேறியபின், பிராதை எழுத்து மூலம் மீண்டும் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கொளஞ்சியப்பரிடம் பிராது கட்டிக் கைமேல் பலன் பெற்ற அன்பர்களின் அனுபவங்கள், மெய்சிலிர்க்க வைப்பன. அவற்றை ஒன்று திரட்டினால் அவையே ஒரு நூலாகும்.

நீங்களும் நீதிதேவனாம் கொளஞ்சியப்பரிடம் குறை இரந்தால் வாழ்வில் வெற்றி பெறலாம். நலம்கோடி பெற்றுச் சுகமாக வாழலாம். ★

ஆதித்ய இருதயத்தின் சிறப்பு

அகத்திய முனிவர் இராமருக்கு "ஆதித்ய இருதயம்" உபதேசித்தார். அதனை ஓதி இராமபிரான் யுத்தத்தில் இராவணனை வதம் செய்தார்.

இதனால் வெற்றிக்குச் சூரிய பகவானின் அருள் அவசியம் என்பதை "ஆதித்ய இருதயம்" உணர்த்துகின்றது.

குறள் காட்டும் வாழ்வு

வாழ்வு பலவகை, குறள் காட்டும் வாழ்வு ஒரு தனிவகை. அதை உலக மக்களுக்குக் காட்டியவர் திருவள்ளுவர்.

மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் மக்களாகவே வாழவேண்டும் என்பது அவரது பேராசை அல்ல, மிகப் பெரிய ஆசை.. அதன் விளைவே திருக்குறள். அது காட்டும் வாழ்வே குறள் காட்டும் வாழ்வு. வாழ்வாங்கு வாழ்தல் என்று அது கூறுகிறது. இது வாழவேண்டிய முறைப்படி வாழ்தல் எனப் பொருள்படும். வாழவேண்டிய முறை என்பது தனக்காக, தன் குடும்பத்துக்காக என்று வாழாமல்,

பிறருக்காகவும் வாழவேண்டும் என்பதாகும். இவ்வாழ்வு முறையைத் திருக்குறள் கீழ்கண்டவாறு பலவகையாக நமக்குக் காட்டுகிறது.

1. எது மக்கள் வாழ்வு?

ஒருவரை ஒருவர் அடித்துத் துன்புறுத்தி வாழ்வது விலங்கு வாழ்வு. தன்னலங்கொண்டு உயரப்பறப்பது பறவை வாழ்வு. தீமை செய்தவருக்குத் தீமை செய்து வாழ்வது தேள், பாம்புகளின் வாழ்வு. தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய் வாழ்வு. தீமை செய்யாதவர்களை மன்னித்துவிடுவது மட்டுமன்று அவர்களுக்கு நன்மையைச் செய்து வாழ்வதே மக்கள் வாழ்வு எனக் குறள் கூறுகிறது.

2. வாழ்வுக்குப் பத்து உடைமைகள்

உடலுக்குச் சில உடைமைகளை அணிவது போல், உள்ளத்திற்கும் சில உடைமைகளை அணிந்து வாழ்வதே குறள்காட்டும் வாழ்வு ஆகும். அவை அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, ஆள்வினையுடைமை, ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை, நாணமுடைமை, பொறையுடைமை, பண்புடைமை என்பன. இப்பத்து உடைமைகளையும் பத்துத் தலைப்புகளில், நூறுகுறள்களாக்கி மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இவற்றைத் தம் உள்ளத்தில் அணிந்து வாழ்ந்தாக வேண்டும் எனக் குறள் நல்வாழ்வுக்கு வழிகாட்டுகிறது.

3. பத்துக் கட்டளைகள்

பொய்யைச் சொல்லாதே!

புலாலை உண்ணாதே!

முத்தமிழ்க் காவலர் -
கலைமாமணி அமரர்
டாக்டர் கி.ஆ.பெ.விசுவநாதம்

திருவள்ளுவர் ஆலயம் அமைந்துள்ள இடம்

சென்னையில் திருமயிலையில் திருவள்ளுவர் அவதாரம் புரிந்த இடத்தில் திருவள்ளுவர் ஆலயம் அமைந்துள்ளது.

சென்னை வரும் அன்பர்கள் அவசியம் இக்கோயிலை வந்து வழிபட்டு செல்லவேண்டும்.

கள்ளைக் குடிக்காதே! களவை நினையாதே! காமங் கொள்ளாதே! கொலையைச் செய்யாதே! சூதை விரும்பாதே! புறங்கூறாதே! பொறாமையடையாதே! பேராசை கொள்ளாதே! என்ற பத்துக் கட்டளைகளும் நல்வாழ்வு வாழக்குறள் இடும் கட்டளைகளாகும்.

4. பழிக்கு அஞ்சி வாழ்தல்

நம் முன்னோர்களாகிய நூலோர்கள் தொகுத்துக் கூறியவற்றுள் எல்லாம் தலையாய அறங்கள் இரண்டு. அவை பகுத்து உண்ணல் ஒன்று. பல்லுயிர் ஓம்புதல் மற்றொன்று. ஆனால் வாழ்வாங்கு வாழ அவை இரண்டும் மட்டும் போதாது, ஒழுக்கமாக நடந்தாக வேண்டும் எனக்குறள் ஒரு புதுவழியைக் காட்டுகிறது. இதைப் பழியஞ்சு! பகுத்துண்! என்ற குறள் நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

5. விரும்பி வாழ நான்கு

நகை,ஈகை, இன்சொல்; இகழாமை ஆகிய நான்கையும் விரும்பிக் கைக்கொள். அது உன் வாழ்வை வளமாக்கும் என்பதே குறள் காட்டும் வாழ்வு.

6. வெறுத்து வாழ நான்கு :

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்பன அவை. பிறரைக் கண்டு பொறாமைப்படாதே! பிறர் பொருளின் மீது ஆசை வைக்காதே! எவர்மீதும் சினம் கொள்ளாதே! எப்போதும் கடும் சொற்களைச் சொல்லாதே! இந்நான்கும் நம் வாழ்வுக்கு ஒளிவீசும் எனக் குறள்கூறுகிறது.

7. வழங்கி வாழ நான்கு :

அன்பு உள்ளம் கொண்ட சான்றோர்கள் தம் தசையை, நரம்பை, தோலை மட்டுமல்ல, தம் எலும்பையும் பிறருக்கு வழங்கி வாழ்வர் என்ற கருத்தை 'என்பும் உரியர் பிறர்க்கு' என்ற குறட் சொற்றொடர் கூறிக்கொண்டிருக்கிறது.

8. வாழ்வுக்கு வேண்டிய நட்பு :

நட்பு நல்வாழ்வுக்குத் தேவை. ஆகவே, நட்பைக்கைக்கொள். அதையும் ஆராய்ந்து கொள்! தீ நட்பு கொள்ளாதே! பழமையைத் தள்ளாதே! கூடா நட்பு கூடாதே! சிற்றினம் சேராதே! பெரியோரை வெறுக்காதே! என்ற ஏழு தலைப்புகளில் எழுபது குறள்களைக் கூறி வாழ்வுக்கு வழிகாட்டுகிறது குறள்.

9. கற்றபடி நிற்றல் :

படி! எல்லாவற்றையும் படிக்காதே! படிக்கவேண்டியவற்றைப்படி! அதையும் பிழையறப்படி!மனதில் உள்ள கசடு அறும்படி படி! கற்றிலன் ஆயினும் கேள்! கற்றவற்றையும் கேட்டவற்றையும் சிந்தித்து உணர்! அந்த அளவோடு விட்டுவிடாதே. அதன்படி நட! எனக் குறள் நல்வாழ்வுக்கு வழிகாட்டுகிறது.

10. உள்ளத்தை உயர்த்தி வாழ் :

நல்வாழ்வு வாழவேண்டுமானால் உள்ளத்தை உயர்த்தி வாழ். சிறியன சிந்தியாதே. எப்போதும் பெரியதையே எண்ணு. அழுத்தமாக எண்ணு. ஆழமாக எண்ணு. அப்படியே ஆவாய்! வெள்ளம் உயர உயர மலர் உயர்வது போல உள்ளம் உயர உயர நீ உயர்வாய்! நல்வாழ்வு வாழ உள்ளத்தை உயர்த்து எனக் கூறுகிறது குறள்.

11. யார் பெரியார்?

நாம் ஒரு காலத்தில் பணக்காரர், நிலக்காரர், முதல்காரர் ஆகியவர்களைப் பெரியர் என நினைத்திருந்தோம். அடுத்து படித்தவர், பட்டம் பெற்றவர், பதவியிலிருப்பவர் பெரியர் என எண்ணினோம். பின் வயதில் முதிர்ந்தோர் பெரியோர் எனக் கருதினோம். இப்பொழுது

தமிழ்த்தாயின் செங்கோல் திருக்குறள்

தமிழ்த்தாய் காதுகளில் அணிந்துள்ள
குண்டலம் - குண்டலகேசி
கைகளில் அணிந்துள்ள வளையல்கள்
- வளையாபதி
மார்பில் அணிந்துள்ள முத்தாரம்
- சிந்தாமணி
மெல்லிய இடையாபரணம்
- மணிமேகலை
திருவடிகளில் அணிந்துள்ள சிலம்பு
- சிலப்பதிகாரம்
திருமுடியின் மணிமுடி - சூளாமணி
திருக்கரத்தில் தாங்கியுள்ள
செங்கோல் -திருக்குறள்

அருள்மிகு திருவள்ளுவர்

எழுத்தாளர்களையும், பேச்சாளர்களையும் பெரியோர் என எண்ணுகிறோம். குறள் இவற்றை ஒப்பவில்லை. யார் பெரியவர்? என்ற கேள்விக்கு குறள் கூறும் விடை எழுத்தரல்ல. பேச்சரல்ல. 'செய்வர் பெரியர்' என்பதே, இதிலிருந்து மலையளவு பேசுவதைவிடக் கடுகளவு செய்து வாழ்வதே நல்லது எனத் தெரிகிறது.

12. நா நலம் என்னும் நலமுடைமை

"நா நலம் என்னும் நலமுடைமை" என்பது அரைக்குறள். அடுத்து 'அந்த நலம், வேறு எந்த நலத்திலும் இல்லை' என்பதே, அதுமட்டுமன்று, 'நாநலம்' என்பதே 'நலமுடைமை' என்பது தான். இதுதான் அதன் உண்மையான பெயர் என்றும் குறள் கூறிக்கொண்டிருக்கிறது. அளவோடு பேசுதல், ஆராய்ந்து கூறுதல், எவரையும் வையாதிருத்தல் ஆகியவை அனைத்தும் நாநலத்தின்பாற்பட்டவை என்று குறள் கூறுகிறது.

13. தோற்றத்தைக் கண்டு மயங்காதே

கருப்பாக இருக்கிறது. கோணலாக இருக்கிறது. நாரும் நரம்புமாக இருக்கிறது என்று வெறுத்து விடாதே 'வீணை யை' நீ இன்பத்தை இழந்து விடுவாய்! சிவப்பாக இருக்கிறது, அழகாக இருக்கிறது. நேராக ஒழுங்காக இருக்கிறது என்று நெஞ்சில் வைத்து விடாதே 'அம்பை'. அது உன்னைக் கொன்று விடும். இவை இரண்டு மட்டுமல்ல, வேறு எதனையும் தோற்றத்தைக் கண்டு மயங்கிவிடாதே, வாழ்வு பாழாகிவிடும் என எச்சரிக்கை செய்கிறது குறள்.

14. பொருள் தேடும் வழி :

பெற்ற தாயின் வயிறு பசிக்கக் காண்பது, பிறந்த மகனுக்கு இழிவு. எப்பாடு பட்டேனும் அத் தாயின் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டியது பிறந்த மகனின் கடமை. ஏனெனில், அது அவன் குடியிருந்த கோயில். என்றாலும், அந்த நிலையிலும் ஒருவன் தவறான வழியில் பொருளைத் தேடிவந்து தாயின் பசியைப் போக்க எண்ணுவது தவறு. எண்ணினால் அத்தகையவரைச் சான்றோர் பழித்து ஒதுக்கிவிடுவர் எனக்கூறுகிறது குறள்.

15. வினைத் திட்பம் :

ஒரு நல்ல செயலைச் செய்வதற்கு வேண்டியது பொருளுதவி அல்ல. நண்பர்களின் துணை அல்ல. மனைவி மக்களின் ஒத்துழைப்பல்ல, அரசாங்கத்தின் ஆதரவு அல்ல. வேறு எதுவுமே அல்ல. அவனுக்கு வேண்டியது மன உறுதி ஒன்றே. இதை "வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்" என்ற குறள் காட்டுகிறது.

'இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி' என்பது மறுபாதிக் குறள். இதற்கும் மூன்று பொருள்கள் உள்ளன. ஒன்று, ஒழுக்கம் தவறியவன் எல்லோராலும் பழிக்கப்படுவான் என்பது. மற்றொன்று, ஒழுக்கம் தவறியவன் பின்பு திருந்தி நல்ல காரியங்களைச் செய்தாலும் உலகம் நம்பாது. அவன் முன்செய்த பாவங்களைப் போக்கவே இவற்றைச் செய்கிறான் எனக்கூறிப் பலரும் பழி தூற்றுவர் என்பது. இன்னொன்று, அவன் செய்யாத-பிறர் செய்த தவறுக்கும் பழி ஏற்க நேரிட்டு விடும் என்பது. இந்த மூன்றாவது கருத்தை இக்குறளிலுள்ள "எய்தாப் பழியையும் எய்துவர்" என்ற சொற்றொடர் நமக்கு விளக்குகிறது.

எப்படி,

குறள் காட்டும் வாழ்வு

★

அருள்மிகு வாசுகி அம்மை

திருக்குறளின் இரண்டு அடிகள்

சிவபெருமானின் இரண்டு திருவடிகள் போன்ற பெருஞ்சிறப்பினைக் கொண்டன என்று போற்றுகின்றார் சிவப்பிரகாச சுவாமிகள்.

"என் அடிகள் வெண்குறள்நேர்
அடியிரண்டும் என் தலைமேல்
இருத்தும் இறை"

என்று திருவெங்கைக் கலம்பகம் எனும் நூலில் சிவப்பிரகாசர் திருக்குறளின் இரண்டு அடிகளைச் சிவபெருமானின் இரண்டு திருவடிகளாகப் போற்றியிருக்கக் காணலாம்.

கோவர்த்தனகிரியே திருவேங்கடமலை



பாலகிருஷ்ணன் தன்னுடைய பிஞ்சுவிரலினால் கோவர்த்தன கிரியைத் தூக்கி நிறுத்தி ஏழுநாட்கள் கோகுலத்தில் ஆநிரை காத்தவரலாறு அனைவரும் அறிவர்.

கோவர்த்தனகிரிக்கு இந்நிகழ்ச்சி மிகுந்த வருத்தத்தைத் தந்தாம். இந்தக் குழந்தை நம்மைத் தூக்கிப் பிடித்து நின்றானே!. அந்தப் பிஞ்சுக் கைகளுக்கு எவ்வளவு வலித்திருக்கும்! என்று மிகவும் வருந்திய கோவர்த்தனகிரி அதற்குப் பிராயச் சித்தம் செய்ய எண்ணியதாம்.

அடுத்து, கிருஷ்ணர் திருவேங்கடமுடையானாக அவதரிக்கப் போகிறார் என்ற விவரம் அறிந்து, அப்போது அவரைத் தாங்கும் ஏழு மலைகளாக மாறி, ஏழுநாள் தன்னைத் தூக்கியிருந்தவருக்குப் பிரதி உபகாரம் செய்வோம் என்று வேண்டி வந்தது தான் நாம் இப்போது காணும் திருப்பதி ஏழுமலை ஆகும்.

ஏழுமலையின் பெயர்களும் அதன் காரணங்களும்:

1. சேஷாசலம் - ஆதிசேடனன் எழுந்தருளியிருப்பதால்.
2. வேதாசலம் - வேதங்கள் மலையில் வாசம் செய்வதால்.
3. கருடாசலம் - கருடன் மலையைப் பூமிக்குக் கொண்டு வந்ததால்.
4. ரிஷபாத்ரி -ரிஷபருக்கு மோட்சம் கிடைத்ததால்.
5. அஞ்சனாத்ரி - அஞ்சனைக்கு மகனான ஆஞ்சநேயர் பிறந்ததால்.
6. ஆனந்தகிரி - ஆதிசேடனும், வாயுவும் தங்கள் பலத்தால் .மலையைக் கொண்டு வந்தார்கள். அதனால் விமானம் ஆனந்தவிமானம் எனப்படும்.
7. வேங்கடாசலம் - நம் பாவங்கள் போக்கும் மலை என்பதால்.

- திருமதி **இந்திரா ஆராஅமுதன்**, திருவரங்கம்

வாழ்த்துக்கள்

யோகி ராம் சுரத்குமார் துணை

ஹோட்டல் பாலாஜி

எண்.127, தாணா தெரு, புரசைவாக்கம்,
சென்னை - 600 007. போன் : 26424215

ஆகாஷ் ஹோட்டல்ஸ்

போர்டிங் லாட்ஜிங்
பஸ்நிலையம் எதிரில், திருஅண்ணாமலை
போன் : 04175 - 252151, 252152

பத்மஸ்ரீ சில்பகலாமணி

முத்தையா ஸ்தபதி

அவர்களுடன் ஒரு பேட்டி...

அகில உலகமும் ஆச்சரியப்படும் வகையில் அநேக திருக்கோயில்களைக் கட்டி வருபவர் பத்மஸ்ரீ சில்பகலாமணி எம்.முத்தையா ஸ்தபதி அவர்கள்

இதிகாசங்கள் போற்றும் தேவமயன்போல் இந்நூற்றாண்டில் உலகெங்கிலும் திருக்கோயில்கள் அமைத்துப் புகழ்கொண்டு வரும் இவருடைய பேட்டியைத் திருக்கோயில் வாசகர்களுக்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கேள்வி : படைப்புக் கடவுள் உயிர்களைப் படைக்கின்றார். அப்பிரம்மாவை மட்டும் அல்ல. சிவபெருமான், திருமால், விநாயகர், முருகப்பெருமான், அம்பாள் எனத் தெய்வங்களையே படைக்கும் பிரம்மாவாகத் திகழ்கின்றீர்கள்.

இப்புண்ணியபணி செய்யப் பற்பல பிறவிகளில் தாங்கள் புண்ணியம் மிகச் செய்திருக்க வேண்டும்.

சிற்பியாக உருவாக வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது?

பதில் : எங்கள் முன்னோர்கள் பரம்பரையாகக் கோயில்கள் கட்டுதல் மற்றும் கல் சிற்ப விக்ரகங்கள் செய்வதில் சிறந்து வந்திருக்கிறார்கள். என் தகப்பனார் முத்து ஆச்சாரி அவர்கள் விஸ்வகர்மா என்று அழைக்கப்பெறும் கலைக் குடும்பத்தில் பிறந்தவர்கள். இவரது பாட்டனாரும், தந்தையாரும், சகோதரர்களும் பல திருக்கோயில்கள் புதியதாக அமைத்தும் அநேக கல் விக்ரக சிற்பங்கள் செய்தும் வரலாறு படைத்துள்ளார்கள். அந்த விஸ்வகர்மா குடும்பத்தில் பிறந்ததால் எனக்கும் சிற்பியாகும் ஆசை இயல்பாக வந்து விட்டது.

கேள்வி : நீங்கள் எங்குப் பயின்றீர்கள்? சிற்பக்கலை பயின்ற வரலாற்றையும் விரிவுபடக் கூறுங்கள். எங்களுக்கு அவற்றைத் தெரிந்து கொள்வதில் மிகவும் ஆர்வமாக உள்ளது. தமிழ் மக்களும் இதை அறிய ஆர்வமாக இருப்பார்கள்.

பதில் : தொடக்கப்பள்ளிக் கல்வியை தேவகோட்டையை அடுத்து இராம்நகரில் முடித்தேன். அரசால் ஏற்படுத்தப்பெற்ற மாமல்லபுரம் சிற்பக்கலைக் கல்லூரியில்சேர்ந்து திரு வைத்தியநாத ஸ்தபதியை குருவாகக் கொண்டு 1957 முதல் 1961வரை திருக்கோயில் நிர்மாணம் மற்றும் சிற்பக்கலை ஆகியவற்றைப் பயின்றேன். மேற்படி சிற்பகலை கல்லூரியில் பயின்ற பிறகு திருக்கோயில்கள் கட்டுதல் மற்றும் விக்ரகங்கள் செய்தல் போன்ற திருப்பணிகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்.

கேள்வி : நீங்கள் இந்தியாவில் கட்டிமுடித்த முக்கியமான கோயில்கள் பற்றிக் கூறுங்கள்?

பதில் : ஆந்திர மாநிலம் பத்திராசலத்தில் இராமர் கோயில் கட்டும் பணி செய்து முடித்தேன்.

★ ஆந்திர மாநிலம் ஸ்ரீசைலத்தில் பிரம்மரம்பா தேவிக்கு விமானம் கட்டி இரண்டு இராஜ கோபுரங்களும் அமைத்துத் தந்தேன்.

★ஆந்திர மாநிலம் ஸ்ரீகாளஹஸ்தி யில் எல்லா கோபுரமும் புதுப்பித்துள் ளேன்.

★ ஆந்திர மாநிலம் திருப்பதியில் திருப்பதி திருமலை தேவஸ்தானத்தில் நுழைவு வாயில் அமைத்துள்ளேன் மற்றும் 1968இல் தேவஸ்தான ஸ்தபதியாகவும் இருந்துள்ளேன்.

ஹூஸ்டனில் மீனாட்சியம்மன் ஆலயம்

★ கேரள மாநிலத்தில் ஆதிசங்கரர் அவதரித்த காலடி என்ற ஊரில் 180 அடி உயர ஆதிசங்கரர் கீர்த்தி மண்டபம் செய்துள்ளேன்.

★ குருவாயூரில் பார்த்தசாரதி கோயில் கருங்கல்லால் கட்டியுள்ளேன்.

★ கர்நாடகத்தில் மங்களூர் அருகே கட்டீல் என்ற இடத்தில் துர்கா பரமேஸ்வரி ஆலயம் மற்றும் கோபுரம் கட்டியுள்ளேன்.

★ சென்னை நங்கநல்லூரில் அனுமார் கோயில் கட்டியும் அத்துடன் ஒரே கல்லால் ஆன 32 அடி உயர அனுமார் சிலையும் செய்துள்ளேன்.

★ சென்னை பெசன்ட் நகரில் சோழர் கால பாணியில் ஆறுபடைவீடு (ஆறு கோயில்கள்) கருங்கல்லினால் கட்டியுள்ளேன்.

★ டெல்லி இராமகிருஷ்ணபுரத்தில் மலை மந்திரில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், ஸ்ரீ கணபதி கோயில் பாண்டியர் காலப் பாணியில் கட்டியுள்ளேன். இங்கு சங்கர மண்டபம் கட்டி, மிக அற்புதமாக 8 அடி உயரத்தில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கருங்கல்லால் செய்து, வள்ளி கல்யாணம் 8 அடி உயரத்தில் செய்துள்ளேன்.

கேள்வி : அயல்நாட்டுப் பணிகள் பற்றிக் கூறுங்கள்?

★ அமெரிக்காவில் டெக்ஸாஸ், ஹுஸ்டன் நகரில் 5 ஏக்கர் பரப்பில் மீனாட்சி அம்மன் திருக்கோயில் 4 இராஜகோபுரங்களுடன் அமைத்துள்ளேன்.

★ லாஸ் ஏஞ்சல்ஸில் மாலிபு பீச் சமீபம் 5 ஏக்கர் நிலப்பரப்பில் வெங்கடேசுவரர் ஸ்வாமி திருக்கோயில், சிவா திருக்கோயில் மற்றும் இராஜகோபுரங்கள் கட்டியுள்ளேன்.

★ சிக்காகோவில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் வெங்கடேஸ்வரா திருக்கோயில் கற்பகக்ருஹம், இராஜகோபுரம் மற்றும் மண்டபங்கள் கட்டியுள்ளேன்.

★ சான்பிரான்சிஸ்கோவில் சிவா விஷ்ணு திருக்கோயில் மற்றும் கோபுரங்களும் கட்டியுள்ளேன்.

★ பென்சில்வேனியாவில் பிட்ஸ்பர்க்கில் இந்து கோயில் மூன்று கருவறைகளுடன் விமானம் மற்றும் பிரகார சன்னதிகளுடன் கட்டியுள்ளேன்.

★ டென்னிஸ் மாநிலத்தில் நாஸ்வில்லியில் மிக அழகான 7 அடி உயர கல் விநாயகர் விக்ரகமும் மிக அழகான கோயிலும் அமைத்துள்ளேன்.



★ பாஸ்டனில் மஹாலட்சுமி திருக்கோயில் மற்றும் கோபுரங்கள் கட்டியுள்ளேன்.

★ஆஸ்திரேலியா, சிட்னியில் உள்ள சுப்பிரமணிய ஸ்வாமி திருக்கோயிலுக்கு கல் சிலைகள் வடித்துள்ளேன்.

★தாய்லாந்து, பேங்காக்கில் உள்ள மகாமாரியம்மன் திருக்கோயில் கோபுரம் மற்றும் விக்ரகங்கள் அனைத்தும் வடித்துள்ளேன்.



★லண்டனில் முருகன் கோயில் மற்றும் கோபுரங்கள் கருங்கல்லினால் செய்துக் கொண்டிருக்கிறேன்.

கேள்வி : உங்களுக்கு கிடைத்த பட்டங்கள், சிறப்புகள் பற்றிக் கூறுங்கள்?

★ 1976 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் ஸ்ரீ காமாட்சி அம்மன் திருக்கோயில் கும்பாபிஷேகத்தில் "சில்பகலாமணி" என்ற பட்டம்.

★ 1990 ஆம் ஆண்டு தென்காசி, காசிவிஸ்வநாத திருக்கோயில் கும்பாபிஷேகத்தின் போது "சிற்ப கலைச் செம்மல்" என்ற பட்டம். ஸ்ரீமதி சௌந்தரா கைலாசம் அவர்களால் ஸ்வாமி கிருபானந்த வாரியார் முன்னிலையில் வழங்கப்பெற்றது.

★ அடையார் மத்திய கைலாஸ் கோயில் கும்பாபிஷேகத்தின் போது "சில்ப சாஸ்திர சிம்மம்" என்ற பட்டம் வழங்கப் பெற்றது.

★ நியூயார்க் ஆத்தியாயன யுனிவர்சல் மிஷன் என்ற அமைப்பால் "மஹோனத் சில்ப கலா சிரோமணி" என்ற பட்டம் வழங்கப்பெற்றது.

★ திருவண்ணாமலை ஆதினம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களால் "சில்ப கலை அரசர்" என்ற பட்டம் வழங்கப்பெற்றது.

★ தமிழ்நாடு ஆன்மீக பேரவையால் "சில்ப சாஸ்திர வித்யா சரஸ்வதி" என்ற பட்டம் வழங்கப்பெற்றது.

★ பர்மாவில் உள்ள தமிழர்களின் சார்பில் "கலை வேந்தர்" என்ற பட்டம் வழங்கப்பெற்றது.

★ 1992இல் மேன்மைமிகு இந்திய ஜனாதிபதி அவர்களால் பத்மஸ்ரீ விருது வழங்கப்பெற்றது.

★ 1992 இல் மேன்மைமிகு இந்திய ஜனாதிபதி அவர்களால் பத்மஸ்ரீ விருது வழங்கப்பெற்றது.

கேள்வி : இந்துசமய அறநிலையத்துறைக்கு நீங்கள் ஆற்றிவரும் பணிகள் பற்றிக் கூறுங்கள்.

1990ஆம் ஆண்டிலிருந்து இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையில் ஸ்தபதி ஆலோசகராகப் பணியாற்றி வருகிறேன். அண்மையில் **"ஆலயநிர்மாண பிம்ப லட்சண சிற்பநூல்"** எனும் நூலை எழுதி அறநிலையத்துறை வாயிலாக வெளியிட்டுள்ளேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெகுவாக இந்நூலைப் பாராட்டியுள்ளார்கள். ★



கல்யாணப்பட்டு ஜவுளி தினுசுகளுக்கு
மதுரையில்
நியூ விஜய லட்சுமி ஹால்

23ஏ, வெங்கலக்கடைத் தெரு,
மதுரை - 1.
போன் : **2624208**

இலங்கையில் யுத்தம் முடிந்தது. அரக்கன் இராவணன் அழிந்தான். சீதை சிறை மீண்டு சீதாராமனைச் சேர்ந்தாள். வீடணன் இலங்கைக்கு அரசன் ஆனான்.

இராமபிரான் பரதனிடம் தான் அயோத்திக்குத் திரும்பி வருவதாகக் குறிப்பிட்டிருந்த காலமும் நெருங்கியது. இராமபிரான் வீடணன் மூலமாகப் புட்பக விமானத்தைக் கொண்டுவரச் செய்தார். அனைவரும் அதில் ஏறி அமர்ந்து அயோத்திக்குப் புறப்பட்டனர்.

"அவ்விருவரும் இப்போது கடலுக்கு அடியில் கடுந்தவம் செய்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய தவம் நிறைவு அடையுமானால், அவர்களும் இராவணனைப் போல வரமும், உரமும் பெற்று உலகை அழித்து விடுவர். ஆதலின் உலக நன்மைக்காக உடனே நீ அவர்களை அழித்துவிட வேண்டும்" என்று நாரதர் வேண்டிக் கொண்டார்.

நாரதரிடம் இராமபிரான், "மகரிஷியே! தாங்கள் சொன்னபடி அந்த அரக்கர்களும் அழிக்கப்பட வேண்டியவர்களே. ஆனால் நான் உடனே அயோத்திக்குத்

ஆனந்தம் தரும்

அனந்தமங்கலம் ஆஞ்சநேயர்

பேராசிரியர் டாக்டர்
த. அகரமுதல்வன்

அயோத்திக்குத் திரும்பும் வழியில் பாரத்வாஜ மகரிஷியின் ஆசிரமத்திற்கு வருவதாக முன்பே இராமன் அம்மகரிஷிக்கு வாக்குக் கொடுத்திருந்தார். அவசரமான நேரத்திலும் இராகவன் அவ்வாக்கை மறக்கவில்லை.

பாரத்வாஜரின் ஆசிரமத்தில் புட்பக விமானம் இறங்கியது. இராமனும் உடன் வந்தோரும் மகரிஷியின் அன்பான விருந்தினை ஏற்று மகிழ்ந்தனர்.

அப்போது அங்கு வந்த நாரத மகரிஷி இராகவனை வணங்கி, ஆசி கூறினார். பின்னர் "அரக்கரை அழித்து அல்லல் தீர்த்த தசரத மைந்தா! இராவணன் அழிந்து விட்டாலும் இன்னும் அரக்கர் சிலர் ஆங்காங்கே இருக்கவே செய்கின்றனர். அவர்களில் "இரக்த பிந்து, இரக்த இராட்சகன் ஆகிய இருவரும் மிகவும் கொடியவர்கள்" என்று கூறினார்.

"அவர்கள் இப்போது எங்கே இருக்கின்றார்கள்?" என்று இராமச்சந்திரன் கேட்டார்.

திரும்ப வேண்டும். இல்லையேல் அன்பிற் சிறந்த தம்பி பரதன் உயிரையே விட்டுவிடுவானே"! என்றார்.

"அப்படி என்றால், இலக்குவனைப் போருக்கு அனுப்பலாமா?" என்றார் நாரதர்.

"இலக்குவன் என்னைப் பிரிந்திருக்க மாட்டான். ஆதலின், அரக்கரைத் தனித்து நின்று அழிக்க வல்ல ஆற்றல் சான்ற பெருவீரன் ஒருவன் நம்மிடத்தில் உள்ளான்! அவனே அஞ்சனை பெற்றெடுத்த சிங்கம் - ஆஞ்சநேயன்!" என்றார் இராமபிரான்.

அனைவரும் அதனை ஆமோதித்தனர்

இராமபிரான் தம் குலம் காத்த பெருவீரன் அனுமனை அருட் கண்ணால் நோக்கினார்.

அனுமனும் பணிந்து நின்று தன் ஒப்புதலைத் தெரிவித்தார்.

ஆஞ்சநேயர் முன்னரே அழியாவரம் பெற்றவர். அளவிலா ஆற்றல் பெற்றவர். அட்டமா சித்திகளும் கற்றவர். எனினும் மாயாவிகளான அரக்கர்களை வெல்லத் திருமால் தம் சங்கையும்,

சக்கரத்தையும் அனுமனுக்கு அளித்தார். பிரம்மா பிரம்ம கபாலத்தை வழங்கினார். ருத்ரன் மழுவைத் தந்தார். இராமபிரான் வில்லையும், அம்புகளையும் அளித்தார். இந்திரன் வஜ்ராயுதத்தை வழங்கினார். இப்படித் தெய்வங்கள் வழங்கிய ஆயுதங்களைத் தாங்கி ஆஞ்சநேயர் பத்துக் கரங்களுடன் காட்சி தந்தார். அப்போது கருடாழ்வார் தம் இரு சிறகுகளையும் அவருக்குத் தந்தார்.

கடைசியாக அங்கு வந்த சிவபெருமான் பத்து கரங்களிலும் ஆயுதங்களுடன் நின்ற ஆஞ்சநேயரைப் பார்த்தார். தாம் என்ன தருவது என்று சிந்தித்தார். தம்முடைய சிறப்புக்குரிய மூன்றாவது கண்ணையே அனுமனுக்கு அளித்தார்.

மூன்று கண்களும் (திரிநேத்ரம்) பத்து கைகளும் (தசபுஜம்) கொண்ட வீர ஆஞ்சநேயர், உடன் அங்கிருந்து புறப்பட்டு, கடலுக்கு அடியில் பதுங்கித் தவம் செய்து கொண்டிருந்த இரக்த பிந்து, இரக்த ராட்சகன் ஆகிய இருவரையும் சம்காரம் செய்தார்.

பின்னர், அங்கிருந்து புறப்பட்டு இராமனை சந்திக்க வந்தார். வரும் வழியில் கடற்கரை ஓரத்தில் இயற்கை அழகு நிரம்பியுள்ள ஓரிடத்திற்கு வந்ததும் அவருடைய ஆனந்தம் மிகுந்தது. அந்த இடத்தில் இறங்கி, சற்று நேரம் ஆனந்தமாகத் தங்கி இருந்தார். அந்த இடம் ஆனந்த மங்கலம் எனும் பெயர் பெற்றது.

தற்போது ஆனந்த மங்கலம், அனந்தமங்கலம் என்னும் பெயரில் அழகிய சிற்றூராக உள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் தரங்கம்பாடி வட்டத்தில் சிதம்பரம், சீர்காழி, திருக்கடையூர், தரங்கம்பாடி, காரைக்கால் வழியாக நாகை செல்லும் பேருந்து தடத்தில் அனந்தமங்கலம் உள்ளது. இங்கு வந்து செல்லப் பேருந்துகள் நிரம்ப உள்ளன.

அனந்த மங்கலத்தில் ஸ்ரீமன் நாராயணன் ருக்மணி சத்யபாமா சமேத இராசகோபால சுவாமியாகக் கருவறையில் எழுந்தருளியுள்ளார். அவருடைய சந்நிதியை ஒட்டியுள்ள மகாமண்டபத்தில் தனிக்கோயிலில் உற்சவரான திரிநேத்திர தசபுஜ ஆஞ்சநேயர் எழுந்தருளி உள்ளார். கீழச் சன்னதியில் வடக்கு நோக்கித் தனிக்கோயிலில் திரிநேத்ர சதுர்புஜ ஆஞ்சநேயர் மூலவராக எழுந்தருளி உள்ளார்.

திரிநேத்ர தசபுஜ ஆஞ்நேயரை வழிபட்டால் திருமால், சிவபெருமான், இராமபிரான், ருத்ரன், பிரமன், இந்திரன், கருடன் ஆகிய பல தெய்வங்களையும் ஒருசேர வழிபட்ட பயனைப் பெறலாம். முக்கண்களோடும் பத்து கரங்களோடும் ஆனந்தமாகக் காட்சிதரும் அனுமனைக் கண்ட மாத்திரத்திலேயே நம் கவலைகள் கரைந்து போகும்; புதிய தைரியம் பிறக்கும்.

சனி, வியாழக் கிழமைகளிலும், அமாவாசை திதியிலும் இங்கு ஆயிரக் கணக்கான பக்தர்கள் வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

அந்த நாளில் அனந்தமங்கலம் சென்று அனுமனை வழிபட்டு ஆனந்தம் பெறலாம்.

திருமங்கையாழ்வார், அரக்கர்களைக் கூடக் கூவி அழைக்கிறார். அரக்கர்களே உங்கள் மீதுள்ள கோபம் தீர வேண்டுமென்றால் அனுமனைக் கண்டு வணங்கி வாழ்த்துங்கள் என்று அழைக்கிறார்.

"மாற்றமாவது இத்தனையே வம்மின் - அரக்கருள்ளீர்
சீற்றம் நும்மேல் தீரவேண்டின் சேவகம் பேசாதே
ஆற்றல் சான்ற தொல்பிறப்பில் அனுமனை - வாழ்க என்று
கூற்றமன்னார் காண ஆடீர் குழமணி தூரமே."

(பத்தாம் பத்து - மூன்றாம் திருமொழி)

கொடிய அரக்கர்களையே - அவர்கள் மனந்திருந்தி வழிபட்டால் மன்னிக்கும் ஆஞ்சநேயர், நம்மைப் போன்ற எளியவர்களுக்கு நிச்சயம் அருள் புரிவார். ஆனந்தம் பெற அனந்தமங்கலம் வாருங்கள்!

★

ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி

மார்கழி மாதம் அமாவாசை திதியும் மூல நட்சத்திரமும் கூடிய நாளில் அனுமன் அவதரித்தார்.

இந்த ஆண்டு மார்கழி அமாவாசை வியாழக்கிழமையன்று மூல நட்சத்திரத்துடன் கூடி வருகின்றது சிறப்பாகும்.



காலச்சுவடுகள்





விவேகானந்தர் கொண்டாடிய பார்த்தசாரதி

சுவாமி விவேகானந்தர் இப்பூவுலகில் அவதரித்த 142வது பிறந்தநாள் ஜனவரி 12ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது.

அமெரிக்க நாட்டில் சிகாகோ நகரில் 1893 ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் தேதி முதல் 27ஆம் தேதி முடிய நடைபெற்ற சர்வதேச மகாசபையில் கலந்து கொண்டு இந்து சமயத்தின் சகோதரத்துவத்தைப் பறைசாற்றிய பெருமை சுவாமிவிவேகானந்தருக்கே உண்டு.

சர்வதேச மகாசபையில் இவர் கலந்துகொள்ள சென்னைவாழ் சுவாமியின் அன்பர்கள் பணம் திரட்டித் தந்துள்ளார்கள்.

இவர் தம் பக்தர்களில் குறிப்பிடத்தக்கவர் திருவல்லிக்கேணி வாழ்ந்திருந்த அளசிங்கப்பெருமாள் ஆவார்.

அமெரிக்காவில் இருந்து 1893ஆம் ஆண்டு ஆகஸ்டு 20ஆம் நாள் அளசிங்கப்பெருமாளுக்கு சுவாமி விவேகானந்தர் எழுதி அனுப்பிய கடிதத்தில் திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமியை மிகவும் கொண்டாடிப் போற்றியிருக்கிறார்.

"அளசிங்கா! நீ இப்பொழுதே, இந்தக் கணமே ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமியின் திருக்கோயிலுக்குச் செல்வாய். அவன் திருமுன்னர் வீழ்ந்து பணிவாய். கோகுலத்தில் மாடுமெய்க்கும் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த ஏழை இடைச் சிறுவர்களுக்கு உற்ற தோழனாக திகழ்ந்தவன் யாரோ, புலையனானகுகனைத் தம்மவனாக ஏற்று அவனைக் கட்டி அணைத்ததில் தயக்கம் துளியேனும் காட்டாதவன் யாரோ..... அவன் திருமுன் நின்று மகத்தானதொரு தியாகத்தைச் செய்வதாக உறுதி பூண்பாயாக" என்று வெகுவாகப் புகழ்ந்து கொண்டாடியுள்ளார். ***அக்கடிதம் கல்வெட்டாக அருள்மிகு பார்த்தசாரதி கோயிலில் பதிப்பிக்கப் பட்டுள்ளதை இன்றும் நாம் கண்டு மகிழலாம்.***





பூஜை

- "எழுத்துச் சித்தர்"
பாலகுமாரன்

இன்னிக்கு என்ன விசேஷம். இவ்ளோ நேரம் பூஜை.

என் வீட்டிற்கு வந்திருந்த என் நெருங்கிய உறவுக்காரர் கேட்டார்.

அவர் கேள்வி எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சற்றுநேரம் திகைப்பில் இருந்து விட்டு பிறகு மெல்ல இது தினந்தோறும் நடக்கின்ற பூஜைதான். எந்த விசேஷமும் இல்லை என்று சொன்னேன். இப்பொழுது திகைப்பு அவர்பக்கம் போய்விட்டது. அவர் முகத்தில் ஒட்டிக் கொண்டு விட்டது.

"தினமுமா! ஒண்ணேகால் மணிநேரமா! இத்தனை பூ, இத்தனை சாமான்களோடயா" என்று அவர் கேட்க, "நான் ஆமாம்" என்று தலையசைத்தேன்.

"இந்தமாதிரி பூஜை பண்றேன்னு ஏதேனும் வேண்டுதலா?"

அவர் மறுபடியும் சற்று தயக்கத்திற்குப் பிறகு கேட்டார்"நான் "அப்படி ஏதும் இல்லை" என்று சொன்னேன்.

"உங்க குருநாதர் யோகிராம் சுரத்குமார் சொன்னாரோ. இப்படி பூஜை பண்ணணும்னு"

"இல்லை, அவரும் சொல்லவில்லை. ஏனெனில் அவர் பூஜை செய்வதில்லை. யாரையும் இந்த பூஜை செய், அந்த பூஜை செய் என்று சொல்லுகிற வழக்கமும் அவரிடம் இல்லை. தொடர்ந்து ராமநாமம் சொல்லும்படிதான் கேட்டுக்கொள்வாரே தவிர பூஜை புனஸ்காரங்கள் பற்றி அவர் வற்புறுத்துவதேயில்லை."

"யார் சொல்லி. எதுக்காக இந்த பூஜை" அவர் விடாப்பிடியாகக் கேட்டார்.

"நானாக நினைத்துக் கொண்டு செய்கிற பூஜைதான். இதுவொரு பயிற்சி, இது மன ஒருமைக்கான பயிற்சி" என்று சொன்னேன்.

அவர் சற்றுநேரம் யோசித்துவிட்டு "இரண்டு மணிநேரம் துணி துவைக்கலாமே. அதுவும் மன ஒருமைக்கான பயிற்சி ஆகுமே" என்று சென்னார்.

அவர் முகத்தில் ஒரு சிரிப்பு இருந்தது. மன ஒருமைக்காக பூஜை செய்யும் பட்சத்தில், மன ஒருமைக்காக துணி துவைக்கலாமே, மன ஒருமைக்கான பயிற்சிதான் பூஜை எனில் அந்தப் பயிற்சியை துணிதுவைப்பதால் செய்யலாமே. துணி துவைப்பது போலவும் ஆகும்; மன ஒருமைக்கான பயிற்சியைச் செய்தது போலவும் ஆகும் என்று கேலியாகச் சொன்னார்.

நானும் சிரித்தேன்.

துணி துவைப்பதை மன ஒருமையோடு செய்ய முடியுமெனில் தாராளமாகச் செய்யலாம். துணி துவைப்பது மட்டுமல்ல, சவரம் செய்வது, சாப்பிடுவது, வீடு பெருக்குவது, அலுவலகத்தில் வேலையைச் செய்வது போன்ற எல்லாவற்றையும் மன ஒருமையோடு செய்ய முடியுமெனில் அவைகளெல்லாம் பூஜைகள் போலவே உண்டான விஷயங்கள் என்று சொன்னேன்.

அவருக்குப் புரியவில்லை. ஏனெனில் அவருக்குப் புரிந்து கொள்ளும் ஆர்வம் இல்லை. இதுவொரு அபத்தமான விஷயம். இதை நான் செய்வதைவிட வேறு ஏதேனும் செய்யலாம் என்று பூஜையை அவர் மனம் கேலி செய்யத் துவங்கிவிட்டது. புறக்கணித்துவிட்டது.

அவர் ஒரு நிலை எடுத்துக்கொண்டு விட்டார். தன்னைப் பூஜை செய்வதற்கு எதிரானவனாக தீர்மானித்துக் கொண்டுவிட்டார். எனவே, பூஜை செய்வது என்றால் என்ன என்பதை அவருக்கு எவ்வளவு விளக்கிச் சொன்னாலும் புரியாது.

ஜப்பானில் தேனீர் விருந்து என்று ஒன்று ஏற்பாடு செய்வார்கள். அதுவொரு மதச் சடங்கு. ஜப்பானிய கலாச்சாரம். வழிவழியாக வந்த சம்பிரதாயம்.

ஒரு விசாலமான அறையில் காற்றோட்டமான நிலையில் வசதியாக அமர்ந்து கொண்டு இருபுறமும் கையெட்டும் தூரத்தில் மனிதர்கள், உட்கார்ந்திருக்க ஒருவருக்கொருவர் முகமன் கூறி, நலம் விசாரித்து, விடியற்காலை எவ்வளவு அழகாக இருந்தது என்று, சூர்யோதயம் பற்றியோ அல்லது தென்றல் வீசுவது பற்றியோ அல்லது பனிப்பொழிவு பற்றியோ பேசிய பிறகு அந்தத் தேனீர் விருந்துக்குண்டான சிறு கிண்ணங்களை அங்கங்கே நிறுத்தித் தேனீர் ஊற்றி எடுத்துக் கொள்ளுங்கள் என்று மறுபடியும் சிரம் தாழ்ந்து பணிந்து கேட்டுக் கொண்டு அவர்கள் குடிக்கும்போது அவர்களுடைய முகபாவத்தையே

பார்த்து மறுபடியும் தேனீர் ஊற்றி என்று ஒருமணிநேரம் தேனீர் விருந்து நடைபெறும்.

மிகக் குறைவாக, ஆனால் தேர்ந்தெடுத்த வார்த்தைகளைச் சொல்லி விருந்தினரை சந்தோஷப்படுத்தி, அந்தத் தேனீர் விருந்து குடித்து முடித்ததும் மிகப்பெரிய செயல் ஒன்றை செய்தது போல ஒரு நிறைவும், நிம்மதியும் ஆனந்தமும் ஏற்படும்.

விருந்து கொடுத்தவரிடமும், விருந்தில் கலந்து கொண்டவரிடமும் மிகப்பெரிய அன்னியோன்யம் நிலவும். பாசப்பிணைப்பு அதிகரிக்கும். உற்று கவனித்தால் இந்து மதத்தில் செய்யப்படுகின்ற இந்தப் பூஜைகளும் அந்த ஜப்பானிய தேனீர் விருந்துபோல ஒரு நிம்மதியையும், ஆனந்தத்தையும் தரவல்லது.

பஞ்சலோக வினாயகர் சிலையை உச்சிஷ்ட கணபதியாக வரித்து, இந்தப் பூஜை விக்னமின்றி நடக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு, நான் சைவமரபு என்பதால் ஒரு சிவலிங்கத்தை வைத்து, பிறகு உடல் ஆரோக்கியத்திற்காக ஸ்படிக சூரியன் வைத்து, சக்தி வழிபாடு செய்வதால், அந்த மந்திரங்கள் பலரும் சுற்றியிருப்பதால் ஸ்படிகத்திலேயே மேருவை வைத்து, பிறகு தாமிரத்தகட்டில் எழுதி ஸ்ரீ சக்கரத்தை வீட்டின் பலனுக்காகவும், செல்வச் செழிப்பிற்காகவும் வைத்து, ஒரு விஷ்ணு துர்க்கைச் சிலையை எனக்குப் பிடித்த மூகாம்பிகை சிலையாக வரித்து இந்த விக்ரஹங்களுக்கு வாசனைத் திரவியத்தாலும், பாலாலும், கங்கை ஜலத்தாலும் தினசரி பூஜை செய்வது வழக்கம்.

கரும்பை ஏந்திய கடவுள்கள்

காதற்கடவுளான காமன் ஏந்தியுள்ள கரும்பு - காமக் கரும்பு
இது இல்லறத்திற்குத் தேவைப்படும் காதல் உணர்வைக் காட்டுகிறது.
காமாட்சி, இராஜராஜேஸ்வரி ஆகிய அம்மன் தெய்வங்களும் கரும்பை ஏந்தியுள்ளனர். மக்களுக்கு வேண்டிய போகங்களை அருள வல்லவர் அம்பிகை என்பதை இது உணர்த்துவதால் "போகக் கரும்பு" ஆகும் இது.
விநாயகரும், கரும்பை ஏந்திக் காட்சி தருவார். அவர் ஏந்தியுள்ள கரும்பு யோகத்தைக் காட்டுவதால் அது யோகக் கரும்பு.
பட்டினத்தார் ஏந்தியுள்ள கரும்பு - ஞானக் கரும்பு ஞானநெறி நின்றால் முத்திபெறலாம் என்பதை இது உணர்த்துகின்றது.

அபிஷேகம் முடித்த பிறகு மெல்ல பருத்தித் துணியால் ஈரம் போகத் துடைத்துவிட்டு சந்தனக் குங்கும அலங்கார செய்து பட்டுத்துணிகள் விரித்த ஆசனத்தில் அமர்த்தி மூலமந்திர ஜபம் சொல்லிப் புஷ்பங்கள் சார்த்தி, அர்ச்சனை செய்து கஸ்தூரி மஞ்சளும், குங்குமமும் விரல்நுனியால் மணக்க, உள்ளங்கையில் சந்தனம் கமகமக்க, வீடு முழுவதும் ஊதுவத்தியின் நறுமண வாசனை பரவ கண்டு உதடுபிரியாமல் மந்திரஜபம் செய்வது தினசரி வழக்கம். இப்படி அந்த பூஜையில் மட்டுமே மனம் லயித்திருக்கும்,

விக்ரஹங்களை எடுப்பதும், வைப்பதும் அதற்கு விதம்விதமான நீரால் அபிஷேகம் செய்வதும் முழுமனதோடு ஒன்றி செய்யப்படும். வேறு ஏதேனும் காரணங்களால் உடல்நிலையில் சின்ன ஊசலாட்டம் இருப்பினும் அந்த ஊசலாட்டத்தைத் தாண்டி மனம் மெல்ல அந்த பூஜையில் ஒருமுகப்படும் .அப்படிப் பூஜை செய்துவிட்டு எழுந்திருக்கும் போது கண் இரைப்பையில் அமைதியும், நெஞ்சில் ஒரு நிம்மதியும், புத்தியில் ஒரு குளுமையும், வெகுதிடமாய் பரவியிருப்பதை நான் உணர்ந்திருக்கிறேன். இந்த பூஜையின் சந்துஷ்டி அந்த நாள் முழுவதும் பரவியிருக்கும். விசேஷ நாட்களில் பூஜை நேரம் கூடும் . ஜபம் செய்வது அதிகரிக்கும்.

ஜப்பானியத் தேனீர் விருந்தை மிகப்பெரிய கலாச்சாரமென்றும், அற்புதமான சடங்கு என்றும் விவரித்துக் கூறுகின்ற இந்திய ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் இந்துமதம் சொல்கிற இந்த தினசரி பூஜையைப் பற்றி ஏதும் தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.

பூஜைகள் இப்படித்தான் செய்ய வேண்டும் என்று விதிமுறை உண்டா?.

உண்டு. அந்த விதிமுறையின்படியும் செய்யலாம்.

உங்கள் மனம் என்ன கட்டளையிடுகிறதோ அதுபடியும் செய்யலாம். ஒரேயொரு விஷயம். பூஜையை முழுமனதாய் வேறு எந்த சிந்தனையும் இல்லாமல் பூஜையை மட்டுமே செய்கின்ற ஒரு தெளிவோடு இருப்பதுதான் நல்லது.

இந்தப் பழக்கம் பலப்படபலப்பட நீங்கள் எந்த வேலை செய்தாலும் அது சமையல் வேலையாக இருந்தாலும் அல்லது அலுவலக வேலையாக இருந்தாலும் அல்லது வீட்டைச் சுத்தம் செய்வதாக இருந்தாலும் முழு மனதாய் மிகத் தெளிவாய்ச் செய்யலாம்.

முழுமனதாய்ச் செய்கின்ற வேலைகள் மிகச் சுத்தமாக இருக்கும். வேலையில் சுத்தமாக இருப்பவர்கள் மனது அமைதியாக இருக்கும். மனது அமைதியாக இருப்பவர்கள் அடுத்தவரோடு பேசுவதும், பழகுவது, புரிந்துகொள்வதும் தெளிவாக இருப்பார்கள். எனவே, பூஜை என்பது ஒரு நல்ல பயிற்சி. வாழ்வியல் வெற்றிகளை கொண்டு வந்து கொடுக்கின்ற பயிற்சி.

முழுமனதாய் பூஜை செய்ய நீங்களும் பழகலாமே! ★

ஸ்ரீ ராஜா பிரஸ்

திருக்கோயிலுக்குத் தேவையான கட்டணச் சீட்டுகள், பதிவேடுகள், படிவங்கள், லெட்டர் பேடுகள், வண்ணப்புகைப்படங்கள், வண்ணப்படம், லேமினேசன் படங்கள், காலண்டர்கள் முதலியன குறைந்த விலையில் மிகச் சிறந்த முறையில் குறித்த நேரத்தில் செய்து தருகிறோம்.

முகவரி :
7, மேலநாப்பாளையக் குறுக்குத்தெரு, மதுரை - 625 001.
தொலைபேசி எண் : **2327025**

துவக்கம் : 1918 தொலைபேசி : 242233

எ.331, பழனி கூட்டுறவு நகர வங்கி லிட்.,

5, காந்தி சாலை, பழனி

டெபாசிட்தாரர்கள், உறுப்பினர்கள், வாடிக்கையாளர்கள் ஆகிய
அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்

1. எங்களது வங்கி ரிசர்வ் வங்கியால் உரிமம் பெற்று செயல்பட்டு வருகிறது.
2. வங்கியில் பெறப்படும் இட்டு வைப்புகளுக்கு 7.25% வரை வட்டியும், மூத்த குடிமக்களுக்குக் கூடுதலாக $^1/_2$% வட்டியும் வழங்கப்பட்டு வருகிறது.
3. பாதுகாப்புப் பெட்டக வசதி செய்யப்பட்டுள்ளது.
4. வங்கியில் பிற வங்கிகளின் அனைத்து சேவைப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
5. வங்கியில் பெறப்பட்டுள்ள டெபாசிட் 24 கோடிக்கு மேல்உள்ளது. வங்கி சுயசார்பு நிலையில் செயல்பட்டு வருகிறது.
6. வங்கியில் இட்டு வைக்கும் டெபாசிட்களுக்கு இன்சூரன்ஸ் பாதுகாப்பு உள்ளது.
7. வங்கி தொடர்ந்து இலாபத்தில் செயல்பட்டு வருகிறது.

வங்கியின் வளர்ச்சிக்குப் பொதுமக்களும்,
வாடிக்கையாளர்களும் தொடர்ந்து ஆதரவு,
நல்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

எஸ். சண்முகவேல் பாண்டியன், பி.எஸ்ஸி
செயலாளர்

ச.பெருமாள், பி.ஏ.எச்.டி.சி.
கூட்டுறவு சார்பதிவாளர்/ தனி அலுவலர்

தமிழிசை வளர்த்த சீர்காழி மூவர்

பு.ஏ.இராமையா, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி,பண்பாடு மற்றும்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

முத்துத் தாண்டவர்

கி.பி.16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கீர்த்தனையின் தந்தை என்று அழைக்கப்படும் முத்துத்தாண்டவர் பிறந்தார். சீர்காழியில் தோன்றிய இவர் எளிய இசைக் குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய இல்லம் திருக்கோயில் அருகே அமைந்திருந்ததால் ஆடல் மகளிரின் இசையை நாள்தோறும் கேட்க முடிந்தது. அதன் பயனாக இசை அறிவையும் பெருக்கிக் கொண்டார்.

எதிர்பாராத வண்ணமாக நோய் வாய்ப்பட்டிருந்த இவரை பெற்றோர் ஒருநாள் கடிந்து பேசினர். மனம் வருத்தம் அடைந்த தாண்டவர் இறைவனை வழிபடக் கோயிலுக்குச் சென்றார். நீண்டநேரம் வழிபட்டு வந்த காரணத்தினால் அயர்ந்து தூங்கினார். நள்ளிரவில் அர்ச்சகர் மகள் வடிவில் இறைவி அவர்முன் தோன்றி அவருக்கு அன்னம் அளித்து பசியாற்றி வைத்தார். தாண்டவர் தன்னுடைய வறுமையையும், நோயையும் தீர்க்கும்படி இறைவியை வேண்டினார். இறைவியும் "தில்லைக் கூத்தனின் பெருமைகளை இன்னிசையால் பாடினால் வறுமையும் நோயும் தீரும்" என்று கூறினாள்.

என்ன செய்வது என்று அறியாது திகைத்து நின்ற போது "நீ தில்லைக்குச் சென்று வழிபாடு நடத்தும் போது அன்பர் கூட்டத்திலிருந்து வரும் முதல் சொல்லை முதலாக அமைத்துப் பாடுக" என்று அம்மையார் கூறினார். திடீரென விழித்தெழுந்த தாண்டவர் தம் கனவில் தோன்றியவர் உலகமாதாவாகிய சக்தியே என்று உணர்ந்து கொண்டார். முகத்தில் அருள் ஒளி விளங்கப் பெற்றார். அன்று முதல் ஊர் மக்கள் இவரை முத்துத் தாண்டவர் என அழைக்கலாயினர். கனவில் கிடைத்த கட்டளையை நிறைவேற்றத் தாண்டவர் தில்லைக்குச் சென்றார். மெய் அன்பர்கள் கூட்டத்திலிருந்து "பூலோக கைலாச கிரி சிதம்பரம்" என்ற தொடர் வந்தது. அதையே தொடராக வைத்து ஒரு கீர்த்தனை பவப்ரியா இராகத்தில் ஏழெண் சம்பை தாளத்தில் பாடினார்.

ஒவ்வொரு நாளும் கூத்தன் மீது கீர்த்தனை பாடுவதையே வழக்கமாகக் கொண்டார். அவர் இசைத் தொண்டாற்றி வந்த காலத்தில் பல சோதனைகள் ஏற்பட்டன. அவையாவும் இவர் இசைப் பாடலின் ஆற்றலால் மறைந்து போயின.

ஒரு நாள் மாணிக்க வாசகர் பேறு எவக்கு தரவல்லாயோ என்ற பாடலை (கோகிலப்ரியா இராகம் ரூபகதாளத்தில்) பாடிக் கொண்டிருந்தபோது கோயிலின் உள்ளே பேரொளி ஒன்று வெளிப்பட்டது. தாண்டவர் அச்சோதியினுள் மறைந்து இரண்டறக் கலந்தார்.

முத்துத்தாண்டவர் கீர்த்தனை, கிருதி என்ற புதிய இசை வடிவங்களுக்கு வழி வகுத்த பெருமைக் குரியவர். பல கீர்த்தனைகளையும் பதங்களையும் பாடி அருளினார். அவற்றுள் அறுபது கீர்த்தனைகளும் இருபத்தைந்து பதங்களும் அண்ணாமலை பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இவரது இசை வடிவங்கள் யாவும் தில்லைக் கூத்தனின் பெருமைகளைப் பற்றியே பேசுகின்றன. பாடல்கள் அபூர்வ இராகங்களிலும் பாடப்பெற்றுள்ளன. இவை எதுகை, மோனை போன்ற தொடை நயங்களையும் சொற்சுவை, பொருட் சுவைகளையும், இசை அம்சங்களையும், சதி அமைப்புகளையும் கொண்டு திகழ்கின்றன.

"காணாமலிருந்தாலென் கலக்கம் தெளியாதே"

ஸ்ரீமுத்துசுவாமி தீட்சிதர் சூரியனை குறித்து "சூரியமூர்த்தே" என்ற பாட்டை சௌராஷ்ட்ர ராகத்தில் இயற்றியுள்ளார்.

என்ற கீர்த்தனையின் சரணத்தில் திரிபுரத்தை எரித்தானை, கரியுரித்துப் போர்த்தானை, அரி அயனுதித்தானை என்று தொடங்கும் அடிகளில் எதுகைத் தொடை அமைந்து அழகூட்டுவதைக் காணலாம். அந்த அடிகளின் இறுதிப் பகுதிகளில்

"தரித்தானை, முடித்தானை, உதித்தானை, நீற்றானை" என்ற தொடர்களில் இயைபுத் தொடை அமைந்து கீர்த்தனைக்கு எழிலூட்டுகிறது. இது போலவே மூன்று சரணங்களிலும் இயைபுத் தொடை அமைந்து இசை நயத்தைக் கூட்டுவதையும் காண முடிகிறது., இதைப் போலவே இவருடைய கீர்த்தனைகள் பலவற்றிலும் தொடை நயங்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

"காணாமல் வீணிலே காலம்கழித்தோமே" என்ற கீர்த்தனையின் சரணத்தில் சேர, சோழ, பாண்டியர் கோபுரம் அமைத்த செய்தியும் சூரவீரப்பபூபன் திருமதில்களும் பஞ்சாட்சர படிகளும் ஆயிரம்கால் மண்டபமும் அமைத்த வரலாற்றுச் செய்தியும் கூறப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. **"தேடித்திரியாதே நெஞ்சே"** என்று தொடங்கும் கீர்த்தனையில் மூன்றாவது சரணத்தில் "போட்ட இடத்தினில் பொருள்தனைத் தேடு" என்ற பழமொழியைக் கையாண்டுள்ளார். இதைப் போல பல கீர்த்தனைகளில் பழமொழிகளைக் கையாண்டுள்ளதைக் காணலாம்.

இவருடைய கீர்த்தனைகளில் பல்லவியின் முதல் அடியே அனுபல்லவியின் முதல் அடியாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். இது கீர்த்தனைக்கு அழகு தரும் ஓர் அம்சமாகும். "மாயவித்தை செய்கிறானே அம்பலவாணன்" இது பல்லவியின் முதல் அடி. இதே அடியை "மாயவித்தை செய்கின்றான்" என்று அனுபல்லவியிலும் முதல் அடியாகப் பயன்படுத்தி உள்ளார். இவ்வாறு அமைந்த கீர்த்தனைகள் பலப்பல.

"ஆடிய வேடிக்கை பாரீர்" என்று தொடங்கும் கீர்த்தனையின் சரணங்களில் தாளச் சதிகள் அமைந்து கீர்த்தனைக்கு இசை நயத்தைக் கூட்டுகின்றன.

"தாகுசேகிண சேகிணங்கிட ததீங்கத் தொம்
தரிகிட
ததிங்கத்தொம் ததிங்கத் தொம்"

என்று அமைந்த சொற்கட்டுகள் கீர்த்தனைக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

"ஆடிக்கொண்டார்" எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலமைந்த (மாயாமாளவ கௌளை) கீர்த்தனையில் சரணம் முடுகிய (மத்யமகால) நடை அமைப்பில் அமைந்து இசை நயத்தை வெளிப்படுத்துகிறது.

உனை நம்பினேன், சிற்சபைதனிலே, சேவிக்க வேண்டும் எனத் தொடங்கும் கீர்த்தனைகளின் பல்லவி ஓர் அடியில் அமைந்துள்ளன. கீர்த்தனை அமைப்பில் ஓர் அடியில் பல்லவி அமைத்த சிறப்பு முத்துத்தாண்டருக்கே உரியது.

இவரது கீர்த்தனைகளில் பெரும்பாலும் மூன்று சரணங்கள் அமைந்துள்ளன. ஆனால் "ஆடினதெப்படியோ", "ஆரார் ஆசைப்படார்", "சிற்சபை தனிலே", "சேவிக்க வேண்டும் ஐயா" என்ற கீர்த்தனைகளில் நான்கு சரணங்களும் அமைந்திருப்பதைக் காணலாம்.

இசை மரபிலுதித்த முத்துத் தாண்டவரின் பெரும்பாலான கீர்த்தனைகளின் பல்லவி மேல்ஸ்தாயி சட்ஜத்தில் தொடங்கி உள்ளன. இன்னும் ஒரு தலம் (சிமேந்த்ரமத்யமம்), தெரிசனம் செய்வேனே (வசந்தா), தெரிசித்தளவில் (லதாங்கி) ஆகிய கீர்த்தனைகள் மத்திய ஸ்தாயிசட்ஜத்தில் தொடங்கி உள்ளன. ஆடிய வேடிக்கை (சாருகேசி), ஆடினதெப்படியோ (கல்யாணி) ஆரார் ஆசைப்படார் (சங்கராபரணம்), ஈசனே (காமவர்த்தினி), பூலோக கைலாசகிரி (பவப்ரியா) எனத் தொடங்கும் கீர்த்தனைகள் பஞ்சமத்தில் தொடங்கி இருப்பதைக் காணமுடிகிறது.

அருமருந்தொரு (காம்போதி), கண்டபின் (மலையமாருதம்) சிவசிதம்பரமே (நாகசுராவளி) எனத் தொடங்கும் கீர்த்தனைகள் தைவதத்தில் தொடங்குகின்றன. தேடித்திரியாதே (பூர்விகல்யாணி) எனத் தொடங்கும் கீர்த்தனை காந்தாரத்தில் தொடங்குகிறது. தீர்த்த முதல் (சரஸ்வதி) ரிஷபத்தில் தொடங்கி உள்ளதைக் காணலாம்.

இவரது கீர்த்தனைகள் ஆதி, ரூபகம், சாய்ப்பு, ஏழெண்சம்பை ஆகிய தாளங்களில் அமைந்துள்ளன.

இவர் பாடிய பதங்களும் பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்ற அமைப்பிலேயே உருப்பெற்றுள்ளன. பெரும்பாலும் மூன்று சரணங்களே பதங்களிலும் காணப்படுகின்றன. 'திருமுத்துப்பந்தலின் கீழ்', 'சொல்லவாராய்', 'நினைத்துக் கொண்டால்' என்ற பதங்கள் நான்கு சரணங்களைக் கொண்டுள்ளன. இவரது பதங்கள் தில்லைக் கூத்த பெருமானை தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் பாவித்து பாடப் பெற்ற பதங்களாகும். இந்தப் பதங்கள் தேவாரத்தில் காணப்படும் பதங்களுக்கு இணையாக அமைந்துள்ளன. பிற்காலத்தில் உருவாகிய ஆடற்கலை வளர்ச்சிக்கு இவரது பதங்கள் வழிவகுத்தது எனலாம்.

தொடரும்...

சூரியனைப் போற்றும் பாரதியார் கவிதை

நீ ஒளி! நீ சுடர்! நீ விளக்கம்! நீ சாட்சி
மின்னல் இரத்தினம் கனல்
தீக்கொழுந்து
இவை எல்லாம் நினது நிகழ்ச்சி!
நீ சுடுகின்றாய் வாழ்க! நீ காட்டுகின்றாய் வாழ்க!
உயிர் தருகின்றாய் வாழ்க! உடல் தருகின்றாய்,
வளர்கின்றாய், மாய்கின்றாய், நீர் தருகின்றாய்,
காற்றை வீசுகின்றாய் வாழ்க!

? பதில்

★ தேவானை, விழுப்புரம்

கேள்வி : சாளக்கிராமம் என்பது என்ன? இதனை எவ்வாறு வழிபடவேண்டும்?

பதில்: சாளக்கிராமம் என்பதுவழிபாட்டிற்குரிய திருமாலின் பூஜா மூர்த்தங்கள் ஆகும்.


சுதர்சன சாளக்கிராமம்

நேபாளத்தில் ஓடும் கண்டகி நதியில் சாளக்கிராம மூர்த்தங்கள் கிடைக்கின்றன.

ஒரு வகை பூச்சியின் ஓடு கெட்டிப்பட்டு சாளக்கிராமமாக மாறுகிறது என்றும், கூழாங்கல் போன்ற ஒருவகைக் கற்களே சாளக்கிராமம் என்றும் இரண்டு விதமான கருத்துக்கள் கூறப்படுகின்றன.

பிரியம் வதை என்ற பக்தை தனக்கு மகனாகத் திருமால் பிறக்கவேண்டுமென வரம் கேட்டாள்.

அடுத்த பிறவியில் பிரியம்வதை கண்டகிநதியாகத் தோன்றுவாள் என்றும், அந்த நதியில் தமது அம்சமான பல்வேறு சாளக்கிராம மூர்த்தங்கள் உற்பத்தியாகும்என்றும் திருமால் வரம் கொடுத்தார்.

சாளக்கிராமத்தின் மேல் அம்பு சின்னம் இருந்தால் அது இராமச்சந்திரமூர்த்தம், மீன் இருந்தால் மச்சமூர்த்தம், ஆமை இருந்தால் கூர்மமூர்த்தம், சிம்மம் இருந்தால் நரசிம்ம மூர்த்தம். இவ்வாறு 31 வகை மூர்த்தங்கள் உள்ளனவாக அறிகிறோம்.

★இரா.வடிவேலு, திருப்பரங்குன்றம்

கேள்வி : தைப்பூசம், பங்குனி உத்திரங்களில் முருகப்பெருமானுக்குக் காவடி எடுப்பது ஏன்?

பதில் : கயிலாயத்தில் சிவகிரி, சக்தி கிரி எனும் இருமலைகள் இருந்தன. அவற்றை அகத்திய முனிவர் தம் இருப்பிடமான பொதிகை மலைக்குக் கொண்டு வந்து சேர்க்குமாறு இடும்பனிடம் கூறினார்.

இடும்பனும் இரண்டு மலைகளையும் ஒரு மூங்கில் தண்டின் இருபுறமும் கட்டி இன்றைய காவடி அமைப்பில் கட்டிச் சுமந்து வந்தான். இன்றுள்ள திருஆவினன்குடி என்ற பழநிவந்தவுடன் மலைகளைக் கீழே வைத்து இளைப்பாறினான்.

பிறகு மலைகளைத் தூக்க முயன்ற போது அவற்றை அசைக்கக் கூட முடியவில்லை.

இடும்பன் காவடியாகக் கொண்டு வந்த மலையில் முருகப்பெருமான் கோயில் கொண்டார். இடும்பனைப் போல் "காவடி எடுத்தல்" தனக்கு உகந்த பிரார்த்தனையாக அமையும் என்று திருவருள் புரிந்தார்.

ஆகவே, பக்தர்கள் காவடி எடுத்து கந்தனைப் பணிகின்றனர்.

★ சுப்பம்மாள், கொண்டலாம்பட்டி

கேள்வி : இறைவனுக்கு முடிகாணிக்கை செலுத்துவது ஏன்? என்பதை விளக்கிக்கூற வேண்டுகின்றேன்.

பதில்: "தலையலால் வேறு கைம்மாறு இலேன்" என்று பாடுகின்றனர் அருளாளர்கள்.

மேலவர்க்கும் மேலவர்க்கும் மேலவன் ஆகத் திகழும் இறைவனைச் சரணாகதி அடைந்து விட்டோம் என்ற கூறுவதன் அடையாளமே இறைவனுக்கு முடிகாணிக்கை செலுத்துவது ஆகும்.

என்னுடைய ஆற்றலை நம்பி நான் வாழவில்லை,

"எனக்கென ஆற்றல் ஒன்றும் கிடையாது.

உலகைப் படைத்தும், காத்தும், அழித்தும், அருள்விளையாடல் புரியும் சர்வவல்லமை படைத்த இறைவா! உன் திருவடிகளே சரண்" எனச் சரணாகதி அடைந்து விட்டேன், என்னையும், என்னைச் சார்ந்தவர்களையும் துயரங்களிலிருந்து விடுவித்துக் காத்தருள் செய்க என்று இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்ளும் வகையிலேயே பக்தர்கள் முடிகாணிக்கை செலுத்துகின்றனர்.

- ஜெயஉத்திரன்

தியாக பிரும்மம்

இசை மனிதனைத் தன் வயப்படுத்தி உயர்வடையச் செய்வது.

இசையால் நோய்களைக் கூட நீக்கலாம் என நவீன விஞ்ஞான வளர்ச்சி சொல்லுகின்றது.

கவிஞர் தான்சேன் இசையால் தீபங்களை ஒளிரச் செய்தார் எனக் கூறப்படுகிறது.

இசை மனிதனை மட்டும் அல்லாமல் இறைவனையும் மனிதனை நோக்கி வரச் செய்யும் தன்மை வாய்ந்தது என்பதற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர் சற்குரு தியாக பிரும்மம் என அழைக்கப்பட்ட தியாகராஜ சுவாமிகள் ஆவார்.

இசையால் இறைவனைத் தொழுது தன் பாட்டினால் அருச்சித்து அவனைக் கண்டு தொழுது முக்தி அடைந்தவர் தியாகப் பிரும்மம்.

நாதத்தால் இறைவனை அருச்சித்ததால் "நாதப்பிரும்மம்" என அழைக்கப்படுகிறார்.

1762 முதல் 1775 க்குள் திருவாரூரில் மூன்று இசை மேதைகள் தோன்றினர். இவர்களை இசை உலகம் இன்றுவரை "சங்கீத மும்மூர்த்திகள்" என அழைத்து வருகின்றனர்.

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் 1962லும், ஸ்ரீ தியாகராஜர் 1767லும், ஸ்ரீ முத்துசுவாமி தீக்ஷிதர் 1775லும் பஞ்ச பூதங்களில் ஒன்றான மண்ணுக்கு உரித்தான, காசியிலும் வீசம் பெரிதான திருவாரூரில் தோன்றியவர்கள்.

ஆந்திரப் பகுதியில் இருந்து குடிபெயர்ந்து திருவாரூர் வாசம் செய்த குடும்பங்களில் ராமப்பிரும்மம், சாந்தாதேவி என்கிற சீதம்மா ஆகியோர்களுக்குப் பிறந்த மூன்று மகன்களில் ஒருவராகச் சர்வஜித்து வருடம் சித்திரை மாதம் 25ம் தேதி (4.5.1767ல்) பிறந்தவர் சற்குரு தியாக பிரும்மம்.

திருவாரூரில் இருந்து திருவையாற்றுக்கு குடிபெயர்ந்த அந்தக் குடும்பம், ராமப்பிரும்மம் எடுத்த உஞ்சவிருத்தி மூலம் வாழ்க்கையை நடத்தியது.

"கம்பன் வீட்டுக் கட்டுத்தறி" போல் ராமபரபிம்மத்தின் மகன் தியாகராஜனும் இளம் வயதிலேயே கவிபுனைந்து பாடுவதில் வல்லவரானார். தொடக்கத்தில் தான் புனைந்த கவிதைகளை வீட்டுச் சுவற்றில் கரிக்கட்டைகளால் எழுதி வைக்கத் தொடங்கினார்.

"நமோ நமோ ராகவாய", "தவதாசோஹரம்" எனத் தொடங்கும் இரண்டு திவ்ய நாமக் கீர்த்தனைகளும் அவருடைய தொடக்க கால முதல் முயற்சியில் விளைந்த முதிர்ந்த கனிகளாகக் கருதப்படுகின்றன.

திருவையாற்றில் இருந்த இவரது புலமையைச் செம்மைப்படுத்த இவரது தந்தையாரின் முயற்சிப்படி "கோண்டி வெங்கடரமணய்ய" என்பவர் குருவாக வந்து தீட்சை அளித்தார். ஒரே ஆண்டில் கற்றுக்கரை போகி நன்கு கவிகள் புனைந்து பாடுவதில் திறம் பெற்றார்.

தந்தையார் மறைவுக்கு பின் ஒரு நாள் இவரது அண்ணன் ஜல்பேசன் இவரையும் இவரது மனைவியையும் வெளியே தள்ளி வீட்டைப்பூட்டினார். உணவு இல்லாமல் இரவில் வாடிய இவருக்கு இராமரும், சீதையும் வயதான கோலத்தில் அனுமனுடன் வந்து உணவு கொடுத்து உபசரித்ததாக சரித்திரம் உள்ளது.

காஞ்சிபுரத்தில் இருந்து வந்த ஹரிதாஸ் என்னும் ராமகிருஷ்ண யதீந்திரர் இவருக்கு ராமநாமத்தை உபதேசித்தார். ஒரு நாளைக்கு ஒரு லட்சத்து இருபத்தி ஐயாயிரம் முறை ராமநாமத்தை உருப்போட்டு, 21வது வருட முடிவில் 96 கோடி முறை ஜபம் செய்து முடித்தவுடன் ராமலட்சுமனர்கள் காட்சி தந்த வரலாறும் உண்டு.

நாரதர் மாற்றுருவில் வந்து இவருக்கு ஸ்வரார்வம் என்னும் இசை நுணுக்கம் குறித்த ஓலைச்சுவடியைக் கொடுத்துக் கீர்த்தனைகளை சிறப்பிக்கச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

"எந்தரோ மஹானு பாவலு" என்ற கீர்த்தனைபாடி, பொப்பிலி சமஸ்தானத்து அரசவைக் கவிஞர் கேசவய்யா என்பவரை இறையருளால் வெற்றி கொண்ட செய்திகளும் உள்ளன.

பரம்பரையாக இருந்து வந்த ஒரே பீடத்தில் அமைந்த ராம விக்கிரகம் தொலைந்து போக உண்ணா நோன்பு இருந்து அழுது, வேண்டி, ராமரே தான் திருக்குளத்தில் தூக்கி எறியப்பட்டுகிடப்பதைக் கனவில் கூறி, எடுத்து மீண்டும் பூசை செய்து ஆனந்தக் கூத்தாடிய செயல்களும் உண்டு.

பல அபூர்வ ராகங்களில் பல வியத்தகு கீர்த்தனைகளை இயற்றியவர் தியாகையர். ஆனால் ஆனந்த பைரவியில் மட்டும் 3 கீர்த்தனைகளை மட்டும் இயற்றியுள்ளார்.

ஆனந்த பைரவி ராகத்தில் பெயர் பெற்ற திரிபுவனம் சாமிநாதய்யர் என்பவர், ஆனந்த பைரவி ராகத்திலும் தியாகையர் பாடலைப் பாடினால் தங்கள் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுவோம் என்பதனால் பாடவேண்டாம் என வேண்டி இவரிடம், பாடமாட்டேன் எனவும் உறுதிமொழி வாங்கிக் கொண்டதாக சான்றுகள் உள்ளன. அதனால் அதன்பிறகு ஆனந்த பைரவியில் பாடல்களைப் பாடவில்லை எனக் கூறப்படுகிறது.

திருவரங்கத்தில் ஸ்ரீரங்கநாதர் சித்திரை மாதம் ஸ்ரீ சீர்பாதந் தாங்குவோர் தோள்மீது உலா வந்து கொண்டு இருந்தார். பாடல் பாடிக் கொண்டிருந்த இவரைத் தாண்டி சுவாமி சென்று விட்டார்.



ஆனால் சிறிது தூரத்திற்குப் பிறகு அனைவர் கால்களும் நகர முடியாமல் மறத்துப்போய் விட்டதாகவும், அர்ச்சகர் மேல் திருவரங்கத்து அமுதனின் அருள் வந்து, தனது பரமபக்தன் தரிசனம் செய்ய முடியாமல் நிற்பதையும், அவனை அழைத்து வந்து தரிசனம் செய்து வையுங்கள் எனக்கூறியதாகவும், இவர் வந்து தரிசனம் செய்து "வினராஜாநா-மனவி" என்ற கீர்த்தனையைப் பாடி மனங்குளிர்ந்த பிறகே அங்கிருந்து அரங்கன் நகர்ந்து செல்ல முடிந்ததாக வரலாறுகள் உள்ளன.

மனைவி மறைந்த பிறகு தேசசஞ்சாரம் செய்து இறைவனை வழிபட்டு வரும்போது சென்னையில் கோவூர் சுந்தரேச முதலியாரின் பங்களா எண்.4, பந்தர் தெரு, என்ற முகவரியில் 8 நாட்கள் தங்கி அருகில் இருந்த அனைத்துத் தலங்களையும் தரிசித்து மகிழ்ந்தார்.

மீண்டும் திருவையாறு திரும்பும் போது கள்வர்கள் அவரது பல்லக்கை சூழ்ந்து கொள்ள ஸ்ரீராமரும் லட்சுமணரும் வில் வீரர்களாகத் தோன்றிக் கள்வர்களை விரட்டி அடித்த வரலாறுகள் உண்டு.

தான் பரமபதம் அடையப் போகும் நாளை உணர்ந்து சன்னியாசம் பெற்றுக் கொண்டார். 1847 ஜனவரி 5ம் தேதி அனைவரும் அகண்ட நாம சங்கீர்த்தனத்தில் கலந்து கொள்ள வேண்டும் என தனது சீடர்களைக் கேட்டுக் கொண்டார்.

1847 ஜனவசி 6ம் தேதி வகுள பஞ்சமி தினத்தன்று காலை 11.00 மணிக்கு அவரது உச்சந்தலையில் இருந்து ஒரு ஒளிப் பிழம்பொன்று தோன்றி வடக்கு நோக்கி செல்வதை அவரது சீடர்கள் கண்டு மெய்சிலிர்த்தனர்.

திருவையாற்றில் காவிரி ஆற்றங்கரையில் அவரது குரு கோண்டி வெங்கட்ட ரமணய்யாவின் சமாதிக்கு அருகில் அவர் நல்லுடல் அடக்கம் செய்யப்பட்டு பிருந்தாவனம் அமைக்கப்பட்டது.

1925ல் அவரது பக்தை பெங்களூர் நாக ரத்தினம்மாள் அவரது சமாதியின் மீது திருக்கோயிலை அமைத்தார்.

தியாகராஜரின்-சிறப்பு மிகு கீர்த்தினைகளில் பஞ்ச ரத்தினக் கீர்த்தனைகள் மிக முக்கியமானவை. ஐந்து பாடல்கள் ஒவ்வொன்றும் விலை மதிப்பிட முடியாத ரத்தினங்களைப் போல அவை அமையும். அவ்வாறு பாடப்பட்ட பஞ்ச ரத்தினக் கீர்த்தனைகள் 3 மட்டும் உள்ளன. அவை திருவொற்றியூர் தியாகராஜர் மீதும், கோவூர் சுந்தரேஸ்வரர் மீதும், லால்குடி இறைவன் மீதும் பாடப்பட்ட பஞ்ச ரத்தினக் கீர்த்தனைகளாகும்.

இவரது சமகாலத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்து கோவிந்தமாரர், காசி கோபி நாத பட்டாச்சார்யார், ஆந்திரமாநிலம் குண்டூர், தூமுநரசிம்மதாசர், நந்தனார் சரித்திரம் இயற்றிய கோபால கிருஷ்ண பாகவதர், வீணை சுப்பையா, அடானா அப்பய்யா, தோடி சீதாராமய்யா ஆகியோர் சமகாலத்தவர்கள் ஆவார்கள். இவர்கள் அனைவரும் திருவையாற்றுக்கு வந்து அவர் வாயால் பாடக்கேட்டு அனுபவித்து மகிழ்ந்தவர்கள் ஆவார்.

திருவாரூரில் தோன்றித் திருவையாற்றில் வளர்ந்து வாழ்ந்து, திவ்வியத்தலங்கள் பலவும் சென்று, இறைவனை இசையால் பூசித்து, கண்டு, உணர்ந்து போற்றி, பாடி பரவிய பல்லாயிரக்கணக்கான இறைவுணர்வு உடையோரின் உள்ளங்களில் இன்றும் இசையாய் வாழ்ந்து வரும் நாதப்பிரும்மத்தின் பாடல்கள் ஒவ்வொரு ஆண்டும் திருவையாற்றில் தியாகராஜ ஆராதனை என்ற பெயரில் தியாகராஜரின் பாடல்கள் தனியாகவும், கோஷ்டியாகவும் பாடப்படுகின்றன. ★

தியாகராஜர் ஆராதனை

இவ்வாண்டு திருவையாற்றில் தியாகராஜ ஆராதனை 27.1.2005-ல் தொடங்கி 30.1.2005 வரை நடைபெறஉள்ளது .

திருவிளையாடல் புராணம்

- இரா. அரங்கசாமி

குண்டோதரன் அத்தயிர்க் குழியில் தன் கையை வைத்து வாரி வாரி உண்டான். உடனே பசி நீங்கியது. பசி நீங்க உண்ட குண்டோதரன் வயிறு பருத்து மலைபோலக் கீழே விழுந்து மூச்சுவிட முடியாமல் புரண்டான்.

பின்னர் குண்டோதரனுக்கு நீர் வேட்கை மிகுந்தது. உடனே அங்குள்ள நீர் நிலைகளைத் தேடலானான். நடைகிணறு, ஓடைகள், குளங்கள், இவற்றில் உள்ள நீர் முழுவதையும் குடித்துத் தீர்த்தான். இவ்வாறு குடித்தும் நீர் வேட்கை தணியாமல் சோமசுந்தரக் கடவுளை அடைந்து அவர் திருவடிகளில் விழுந்து வணங்கி முறையிட்டான்.

இறைவன் உடனே தம் தலையில் உள்ள கங்கையை நோக்கி "பெண்ணே! நீ இம்மதுரை மாநகரின் பக்கத்தில் ஒரு பெரிய நதியாக விரைந்து ஓடிவருவாயாக" என்று கட்டளை இட்டார். கங்கை சிவபெருமானை நோக்கி, "பெருமானே! முன்னர் பகீரதன் பொருட்டு ஒருமுறை தீர்த்தமாக என்னை ஓடிவரச் செய்தீர். இப்போது அவ்வாறே அருளுகின்றீர். என்னுள் மூழ்கியவருக்கு பக்தியும், அன்பும், மெய்ஞ்ஞானமும், வீடு பேறும் நான் தருமாறு தாங்கள் எனக்குத் திருவருள் புரிய வேண்டும்" என்று வரம் வேண்டினாள்.

"இறைவனும் அவ்வாறே அருள்புரிந்தார்". உடனே கங்கை அளவற்ற வேகத்துடன் பெரியநதி வடிவாய் வரத் தொடங்கினாள். பெரிய ஆரவாரத்துடன் பெரிய மரங்களைப் பெயர்த்துக் கொண்டு அந்நதியானது வந்தது.

சிவபெருமான் குண்டோதரனை அருகே அழைத்தார். அந்நதிநீரைப் பருகக் கட்டளையிட்டருளினார். குண்டோதரன் ஆறின் அருகே சென்று இருகை நீட்டி நீரை வாரித் தனது வாயைத் திறந்து அந்நீரைப் பருகினான். உடனே அவனது நீர்வேட்கை தணிந்தது. பின்னர் அவன் மகிழ்ந்து சென்று இறைவன் திருவடிகளில் விழுந்து வணங்கி ஆனந்தக் கூத்தாடினான். பல இனிய கீதங்களைப் பாடினான். அவனது இசை கேட்டு மகிழ்ந்து இறைவர் பூதகணங்களுக்குத் தலைமை வகிக்கும் பதவியை அவனுக்குக் கொடுத்தார்.

குண்டோதரன் நீர்வேட்கையைத் தணிக்க வந்த கங்கை, வையை என்று அழைக்கப்பெறும். இவ்வையை நதிக்குச் சிவகங்கை, சிவஞானதீர்த்தம், வேகவதி ஆறு, கிருதமாலை என்னும் வேறு பெயர்கள் உண்டு.

சோமசுந்தரப் பெருமான், பாண்டியனின் உருவம் தாங்கி ஆண்டு வருகின்ற காலத்தில் கௌதம முனிவர் என்பவர் காஞ்சன மாலையின் அரண்மனையை அடைந்தார். உடனே காஞ்சன மாலை கௌதம முனிவரின் எதிர் சென்று வணங்கி அழைத்து வந்து உபசரித்து ஆசனத்தில் அமர்த்தினாள். பின்னர் "அடிகளே! பிறப்பின் தொடர்பை நீக்கவல்ல தவத்தினைக் கூறி அருள்க" என்று விண்ணப்பம் செய்தாள்.

உடனே முனிவர் முகமலர்ந்து "காஞ்சனமாலையே! சிவபெருமானே உனக்கு மருமகன் ஆகும் தகுதியையும், உமாதேவியே மகளாகும் தகுதியையும் உடைய சிறப்பினைப் பெற்றாய். உன்னைப் போன்ற சிறந்த தவம் செய்யப் பெற்றவர் உலகில் வேறுயாருளர்? புண்ணியங்களுள் "காயிகம்" சிறந்தது.

அதிலும் கடலில் நீராடுதல் மிகவும் சிறந்தது என்று கூறினார்.

அதனைக் கேட்ட காஞ்சனமாலை தன் மகளிடம் சென்று கடலில் நீராட மிக்க விருப்பம் கொண்டமையைக் கூறினாள். இதனைக் கேட்ட

தடாதகைப் பிராட்டியார், "இதனை எம் தலைவர்க்குத் தெரிவிப்பேன் "என்றாள். உடனே பெருமானிடம் சென்று "கருணைக்கடலே! இன்று எம் தாய் கடலில் நீராட விரும்புகின்றாள்" என்று கூறிக் குறையிரந்தார்.

தேவியின் திருமொழியைக் கேட்ட இறைவர் "கடல் ஒன்றோ? நாம் ஏழு கடலையும் கூவி அமைப்போம்" என்று கூவி அவ்வேழு கடல்களும் வருமாறு திருவுள்ளம் கொண்டார். உடனே ஏழு கடல்களும் மதுரையின் கீழ்த்திசையிலுள்ள ஒரு வாவியிடத்தே ஏழு வகைப்பட்ட நிறங்களோடு வந்து நின்றன. அவ்வேழு கடல்களும் அண்டத்தின் முகட்டினைத்தடவும் அளவுக்கு ஆரவாரித்து எழுந்தன.

இறைவர் தடாதகைப் பிராட்டியாரோடு ஏழு கடலும் நிறைந்த குளத்தின் அருகில் உள்ள நந்தவனத்தின் கண் ஒரு சிங்காதனத்தின் மேல் எழுந்தருளினார். உடனே தடாதகைப் பிராட்டியாரும் தன் தாயை அழைத்துக் கொண்டு ஏழு கடல் வாவிக் கரையின் அருகில் வந்தார்.

அப்போது காஞ்சனமாலை முனிவர்களை நோக்கி "கடல் நீரில் ஆடுதற்குரிய விதி யாது? என்று வினவினாள். அதற்கு அம்முனிவர்கள், "காஞ்சனமாலையே! கணவனுடைய கை, மகனுடைய கை, பசுவினது கன்றின் வால் என்ற இம்மூன்றினுள் ஒன்றைக் கையினால் பற்றிக் கொண்டு நீராடுதலே முறை" என்று கூறினர். உடனே காஞ்சனமாலை "கொடிய பாவியாகிய எனக்குக் கணவனும் மகனும் இல்லையே, இனியான் நீராடப் பெறுவது கன்றின் வால் அல்லாமல் வேறுளதோ? ஆதலால் கன்றின் வாலைப் பற்றிக் கொண்டு நீராடுவேன் "என்றாள்.

இதனைக் கேட்ட பிராட்டியார் தன் உயிர்த் துணைவராகிய இறைவர் திருமுன் சென்று தன் தாயின் குறையை எடுத்துவிண்ணப்பித்தாள். உடனே சுந்தரபாண்டியர், சுவர்க்கத்திலே இந்திரனோடு ஒருசேர வீற்றிருந்த மலயத்துவசபாண்டியன் மேல் திருவுளம் செலுத்தினார். உடனே மலயத்துவச பாண்டியன் தெய்வ விமானத்தில் இனிய வாவியினிடத்தில் வந்து இறங்கினான்.

இறங்கிய மலயத்துவசபாண்டியன், இறைவரை எதிர்கண்டு திருவடிகளை வணங்க முற்பட்டான். அதைக் கண்ட சுந்தரபாண்டியர், தன் மாமன் என்ற முறையினால் தனது திருக்கரத்தினால் தடுத்து மலயத்துவச பாண்டியனைத் தழுவினார். பின்னர் அருளோடு நோக்கி "நின் அன்பு நிறைந்த மனைவியோடும் சென்று தீர்த்தம் ஆடுவாயாக" என்றார்.

பின்னர் மலயத்துவச பாண்டியனை நோக்கி, பிராட்டியார் வர, அவரை அவன் அன்போடு தழுவினான். கணவனைக் கண்ட காஞ்சனமாலை மங்கலநாண் முதலிய அணிகளை அணிந்து தன் கணவன் எதிரே சென்று நாணத்துடன் வணங்கினார். பிறகு காஞ்சனமாலை தன் கையில் பவித்திரம் அணிந்து திருவைந்தெழுத்தை உச்சரித்து அந்தணர் கூறிய சங்கற்ப முறைப்படி தன் கணவன் கையைப் பிடித்துக் கொண்டு பேருவகையோடு கடல்நீரில் ஆடினாள்.

கடலில் இருவரும் மூழ்கி எழுந்தவுடன் பாசம் நீங்கி உமையொரு பாகரது அருள்வடிவத்தைப் பெற்றனர். சிவலோகத்தில் இருந்து அப்போது ஒரு தெய்வ விமானம் மண் மீது வந்து இறங்கியது. மலயத்துவசபாண்டியன் தன் மனையவியாகிய காஞ்சனமாலையுடன் விமானத்தில் ஏறினார். உடனே அந்த தெய்வ விமானம் மேலே எழும்பியது. முனிவர்கள் வாழ்த்தவும், தேவர்கள் துதிக்கவும், 'அரஅர' என்னும் முழக்கம் எங்கும் பரவியது. அவர்கள் சிவலோகத்தை நோக்கிச் சென்றார்கள்.

அதன்பின் பிராட்டியார் இறைவனிடம் சென்று, "என்னுடைய தாய் நீராட விரும்பிய கடல் ஒன்றே. என் பொருட்டு ஏழு கடலையும் அழைத்து அருளினீர். பாண்டியன் மரபு மேலோங்கச் செய்தீர் என மகிழ்ந்து கூறினார். இறைவர் இக்கருத்தினைக் கேட்டு உள்ளம் மகிழ்ந்தார்.

தொடரும்...

நன்றி : இராமலிங்கர் பணிமன்றம், சென்னை.

சிவபெருமானைச் சூரியன் பூசிக்கும் ஏழு தலங்கள்

சிவபெருமானைச் சூரியன் பூசித்துப் பேறு பெற்ற தேவாரத்தலங்கள் ஏழு.

1. திருகண்டியூர்.
2. திருவேதிக்குடி
3. திருக் குடந்தைக் கீழ்க்கோட்டம்
4. திருப்பரிதி நியமம்
5. திருத்தெளிச்சேரி,
6. திருப்புறவார் பனங்காட்டூர்
7. திருநெல்லிக்கா

இவ்வேழுத் தலங்களில் ஆண்டுதோறும் சில குறிப்பிட்ட நாட்களில் சூரியனின் ஒளிக்கதிர்கள் மூலஸ்தானங்களின் மீது விழுவதைக் கண்கூடாகக் கண்டு மகிழலாம்.

நவகோள்களில் தலைமையானது சூரியனே

நவக்கிரகங்கள் ஒன்பதில் தான் ஒன்றாய் இருப்பதுடன் இவற்றிற்குத் தலைமை கொண்டு விளங்குவது சூரியனே ஆகும்.

திருமந்திர உபதேசம்

திருமந்திரச் செம்மல்
டி.வி. வெங்கட்ராமன்,
இ.ஆ.ப.(ஓய்வு)



பக்குவம் அடைந்த சீடன் ஞானாசிரியனால் ஏற்கப்படுகிறான். மலபரிபாகமும், இருவினை ஒப்பும் என்கிற மனத்தெளிவும், சீடனுடைய பக்குவத்தை வலுப்படுத்தும். சீடனுடைய ஞான வேட்கையை நிறைவேற்றும் வகையில் ஞானாசிரியன் வந்து அமைந்து, சீடனுடைய உள்ளத்தைத் தூய்மைப்படுத்தித் தான் பெற்ற ஞானத்தைச் சீடனுக்கு நல்கிட ஆயத்தமாகின்றான். திருவருள் இதற்குத் துணை புரிகிறது.

இந்த நிலையை சத்திநிபாதம் என்று சொல்லி திருவருள் உயிருடன் சேர்வது படிப்படியாக நேரும் என்று சன்றோர்கள் விளக்குவார்கள். அதற்கு மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்ற பெயரும் உண்டு.

அருட்சத்தியின் பதிவு உண்டாகும்போது சிவப்பரம்பொருளே, ஞானசிரியனாக வந்து குற்றங்கள் யாவற்றையும் நீக்கி, சீடன் ஞானப்பாதையிலே விரைந்திட வழி வகை செய்வான்.

"இருவினை நேரொப்பில் இன்னருட்சத்தி
குருவென வந்து குணமல நீக்கித்
தருமெனு ஞானத்தால், தன் செயலற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனவனாமே" - திருமந்திரம்
ஐந்தாம் தந்திரம்

சீடன் சிவமாம் தன்மையைப் பெற்றிருப்பதை முடிந்தமுடிவான நிலை என்று கொள்ள வேண்டும். அதற்கு முன்னர், அவன் பெறவிருக்கும் ஞானத்தின் தன்மையைப் பற்றி சற்றுச் சிந்திப்போம்.

இங்கே பயன்படுத்தப்படும் சொல் ஞானோதயம் என்பதாகும். திருமந்திரத்தில் ஒன்பதாவதுதந்திரத்தில் இந்தத் தலைப்பில் சில மந்திரங்கள் வருகின்றன. உதயம் என்ற சொல் தோற்றம் அல்லது வெளிப்படுதல் என்ற பொருளைத் தரும்.

பொதுவாக, நமது புலன் அனுபவத்தில் தான் தோற்றம், மறைவு போன்ற நிகழ்வுகள் ஏற்படுகின்றன. கதிரவன் தோன்றி மறைகின்றான் என்பது நமது புலன்கள் நமக்குக் கொடுக்கும் அனுபவ அறிவாகும். உண்மையில் கதிரவன் அவ்வாறு தோன்றி மறைவதில்லை என்பதும், ஒரு நிலையில் உள்ளது என்பதும், புலனறிவுக்கு மேலாக நாம் பெற்ற ஒரு அறிவாகும்.

தோன்றிய பொருள் அழியாது என்றும், இல்லாத ஒன்று என்றுமே தோன்றாது என்றும் கூறும் ஒரு வாதத்தைச் சற்காரிய வாதம் என்பார்கள். இந்த வாதத்தை ஏற்று, அந்தக் கண்ணோட்டத்தில் தோற்றம் போன்றவற்றை ஆராய்ந்து, நாம் பெரும் அறிவு எல்லாவற்றிற்கும் மேலானதாக இருக்கலாம்.

இந்த வகையில் சீடன் பெரும் ஞான உதயம் என்பது தோற்றமும், மறைவும் இல்லாத பரம்பொருள் ஒன்றினைப் பற்றிய முடிவான அறிவு அனுபவம் என்று கொள்ளலாம். அதையே ஞானம் என்றும் சொல்லலாம்.

ஞானம் வேறு; அறிவு வேறு. புலன்கள் உதவியுடன் புறத்தேயிருந்து நாம் பெரும் பலவிதமான செய்திகள் நமக்கு ஒருவிதமான அறிவைத்தருகின்றன. இந்த அறிவை நாம் கருவிகள் வழியாகப் பெற்று மனம், புத்தி, சித்தம் போன்றவை மூலமாக நம்முடைய அன்றாட வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக அமைத்துக் கொள்கிறோம். இதைப்பாச ஞானம் எனலாம்.

இந்த அறிவு முழுமையாகாது. எத்தனை நுட்பத்துடன் கூடியதாக இருந்தாலும் நிறைவைத் தராது. இந்த அறிவினால் கலைஞானம், சாத்திரஞானம், தத்துவஞானம் போன்றவற்றைப் பெறக் கூடும். அதே நேரத்தில் இந்த ஞானம் மனிதனுடைய தன்முனைப்பு, அகங்காரம் ஆகியவற்றை வளர்க்கவும் செய்யலாம். இந்த அறிவைப் பெறுவதை விடப் பெறாமல் இருப்பதே மேல் என்று கூட அருளாளர்கள் எடுத்துச் சொல்லுவார்கள்.

இந்த அறிவைக்கடக்க வேண்டும் என்பார்கள். அப்போது கடந்த நிலையில் ஒரு அறிவு பிறக்கும். அதுவே உண்மை ஞானம். இந்த ஞானம் புலன்களாலும், கருவிகளாலும் அடைய முடியாதது. மனவாற்றலால் இந்த ஞானத்தைப் பெற முடியாது.

"அறிவறி வென்றங் கரற்றும் உலகம்
அறிவறியாமையை யாரும் அறியார்
அறிவறியாமை கடந்த றிவானால்
அறிவறியாமை அழகியவாறே"!
- திருமந்திரம் எட்டாம் தந்திரம்

வாசகர் எண்ணங்கள்...

★

திருக்கோயில் டிசம்பர் இதழ் கண்டேன். எவ்வளவு விஷயங்கள்! அளவிலா மகிழ்ச்சி அடைந்தேன். புத்தகத்தைக் கீழே வைக்க மனது இடம் தரவில்லை. ஒவ்வொன்றும் வெகு அற்புதம்.

- **ஜி. ஜெயராமன்.**
கூந்தலூார், எரவாஞ்சேரி 609501.

★

"கலியில் கஷ்டப்படும் மக்களுக்காகவே துணையிருக்க விரும்பினார் எம்பெருமானார்" என ஜோதிட சக்கரவர்த்தி ஏ.எம். இராஜகோபாலனார் எழுதியுள்ள எம்பெருமானார் இராமானுஜர் கட்டுரை அருமையிலும் அருமை."

- **திருமதி பிரேமா விநாயகம்,**
சைதை, சென்னை - 600 015.

★

காலச்சுவடுகள் பகுதியில் தாங்கள் வழங்கியிருந்த இராபர்ட் கிளைவ் அளித்த மகரகண்டி, கலெக்டர் கேரோ தந்த தந்தக் கட்டில் இரு தகவல்களும் மிகச் சிறப்பானவை

- **நா. இராமர்**
சேலம்-636015

பக்குவன், தான் பெற்ற ஞானங்களையெல்லாம் ஏணிப்படிகளாகக் கருதி, பயணத்தைத் தொடருகிறான். அவற்றோடு நின்று விடுவதில்லை. அவன் வேண்டுவது அறிவையல்ல; உண்மைஞானத்தை, சீடன் அறிவைப் பயன்படுத்துகிறான். ஞானங்களையெல்லாம் இறைவன் கொடுத்த பரிசாகக் கொள்கின்றான். அங்கே இறைமையை நாடுகிறான்.

திருஞானசம்பந்தர் உமையம்மையின் திருக்கரங்களிலிருந்து ஞானப்பால் பருகிய போது திருப்பெருகு சிவஞானம், பவமதனை மாற்றும் ஓங்கிய ஞானம், உவமையில்லாக் கலை ஞானம், உணர்வரியமெய்ஞானம் போன்றவற்றைப் பெற்றார் என்று சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர்ப் புராணத்தில் சிறப்பாக எடுத்துச் சொல்வார்.

இந்த ஞானங்களெல்லாம் வெறும் ஞானங்களல்ல. தெய்வத்தன்மை வாய்ந்தவை என்பதைச் சுட்டிக் காட்ட சேக்கிழார் பெருமான் "திருப்பெருகு", "பவமதனைமாற்றும் "உவமையில்லா", "உணர்வரிய" போன்ற சொற்களைச் சேக்கிழார் பெருமான் அமைக்கின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக, திருஞானசம்பந்தர் பெருமான் பெற்றது. மெய் ஞானமே என்பதை "எப்பொருளையும் ஆக்குவான் ஈசனே என்ற உணர்வினை ஆளுடைய பிள்ளையார் பெற்றார்" என்று சொல்லி விளக்குகிறார்.

இந்த உண்மையைத் தத்துவ ரீதியாகத் தெரிந்து கொள்வது என்பது ஒன்று. அதை உள்ளத்தில் உணர்ந்து கொண்டு பரம்பொருள் வியாபகத்தில் தன்னை அமிழ்த்திக் கொள்ளுதல் வேறு. ஒன்று அறிவு, மற்றது மெய்யுணர்வே. மெய்யுணர்வே ஞானமாகும்.

மெய்யுணர்வு உள்ளத்தில் பதிவதையே ஞான உதயமாகக் கொள்ளலாம். திருவருள் தணையுடன் இது நிகழ்கின்றது. இதுகாறும் உறங்கிக் கிடந்த உள்ளம் விழிப்படைகின்றது. இதைச் செய்வதும் இறைவனே. இந்த நிகழ்ச்சியை "அருட்கண விழிப்பித்து" என்பார்கள் திருமூலர் பெருமான்.

திருவருளாலும், குருவருளாலும் மெய்யுணர்வு பெறுவார்களுக்கு, உலகப் பொருள்களின் உண்மை இயல்பு தெளிவாகும். தெளிந்த மனம் அவைகளை விட்டு விலகும். விலக, விலக, இறைவனின் இயல்பு உள்ளத்தில் பதியத் தொடங்கும். இன்பம், துன்பம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்ற உணர்வு உயிருக்கு உண்டாகும். இறைவனைப்பற்றி நிற்கும் எண்ணம் தீவிரப்படும்.

தாம் கேட்ட ஞானத்தை சிந்தித்துத் தெளிந்து கொள்வதே உணர்வுடையார்களுடைய இயல் பாகும். இது பற்றிய திருமந்திரம் பின்வருமாறு:

"உணர்வுடையார் கட்கு உலகமும் தோன்றும்
உணர்வுடையார் கட்கு உறுதுயரில்லை
உணர்வுடையார்கள் உணர்ந்த அக்காலம்
உணர்வுடையார்கள் உணர்ந்து கண்டாரே" -

திருமந்திரம் ஏழாம் தந்திரம்.

மெய்யுணர்வு தன்னிலை விளக்கத்தையும் தரும். தன்னைப்பற்றி உண்மை அறிவு பெறுவது எளிதல்ல. பிறவிதோறும் தன்னை உடலாகவே கருதி, உடலாகவே இயங்கி வந்த உயிருக்கு, தான் வேறு, உடலும் கருவிகளும் வேறு என்று அறிந்து கொள்வது திருவருள் துணையோடு தான் நிகழ வேண்டியுள்ளது.

தான் வேறுபட்ட ஒன்று என்று தெரிந்து கொள்வது மட்டும் போதாது. தான் யார் என்ற ஞானமும், திருவருளால் கூட வேண்டும். தான் ஒரு அறிவுப் பொருள் என்று உயிர் தனக்குள் நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். இங்கேயும் இறைவன் துணை தேவைப்படுகின்றது. திருவருளின்றி இந்த ஞானம் தலைப்படாது. இறைவன் உயிர் ஒரு அறிவுப் பொருள் என்று தெரிவிக்க, உயிரும் அதை உணர்ந்து கொள்கிறது.

"அறிவு வடிவென்றறியாத என்னை
அறிவு வடிவென்றருள் செய்தான் நந்தி
அறிவு வடிவென்றருளால் அறிந்தேன்
அறிவு வடிவென்றறிந்திருந்தேனே" - திருமந்திரம்

திருமூலர்பெருமான் அறிவுதயம், ஞான உதயம் என்ற இரண்டு நிலைகளை எடுத்துச் சொல்கிறார். தான் ஒரு அறிவுப் பொருள் என்று திருவருள் உள்ளத்தில் பதியவைத்ததைக் கண்டு அந்த உணர்வில் நிற்பது அறிவுதயம்.

தான் அவ்வாறு நிற்பதற்கு காரணம் சிவப்பரம்பொருள் என்று உணர்ந்து, தனது அறிவு என்று பேசப்படும் ஒன்று இறைவன் இயக்கினால்தான் இயங்கும் என்றும் விளக்கம் பெற்று, பரம்பொருளின் திருவடிநிழலைச் சார்வதே தலையாய கடமை என்ற கொள்கையை முன் வைத்து தன்னை எல்லா வகைகளிலும் சிவனுக்கு அடிமையாக்கிக் கொள்வதே ஞான உதயத்தின் நற்பயன்களாகும் என்று கொள்ளலாம். **தொடரும்...**

தைப்பூசம் கொண்டாடுவோம்

திருப்புகழ் மாமணி
மு. அருணகிரி



தமிழ் மக்களால் சிறப்பாகப் போற்றப்படும் நாட்களில் தைப்பூசம் ஒன்று. திருஞானசம்பந்தர் தம் திருமயிலைப் பதிகத்தில்

"மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலை
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசு வொண்புழுக்கல் நேரிழையார்
கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்"

எனப் பாடியிருப்பதால், 1300 ஆண்டுகளுக்கு முன்னமே தமிழகத்தில் தைப்பூச விழா சிறந்திருந்தமையை அறியலாம்.

தைப்பூசத் திருநாளில் ஆலயங்களில் தெப்போற்சவத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. தைப்பூச நாளிற் தெப்போற்சவம் நடத்துவதால் உலகம் செழிப்புப் பெறும் என்று நம்பப்படுகிறது. தேவர்களும், தேவரிசிகளும் கூட பூலோகம் வந்து தைப் பூச நன்னாளில் புனலாடித் தெப்போற்சவத்தையும் கண்டு மகிழ்வர். இத்தைப் பூசப் புனலாடுதலின் சிறப்பினைத் திருஞானசம்பந்தர்

"பூசம் புகுந்தாடிப் பொலிந்து அழகாய ஈசன் உறைகின்ற இடைமரு தீதோ"

"வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர்
வந்தீண்டிப்
பொருந்தியத் தைப்பூச மாடி உலகம் பொலி
வெய்த"

என்று போற்றிப் பாடியிருக்கிறார்.

திருநாவுக்கரசரும்,

"பாசம் ஒன்றிலராய் பலபக்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசனெம் பெருமான் இடை மருதினில்
பூச நாம் புனலாடவே"

என்று தைப்பூசப் புனலாடலைப் போற்றியிருக்கிறார்.

தைப்பூசத் திருநாளை ஒட்டித் தெப்பத்திருவிழா நிகழ்வது சிவாலயங்களில் பெரிதும் வழக்கமாய் இருந்து வருவதன் தத்துவத்தையும் நாம் தெளிந்து கொள்வது அவசியமாகும். பிறவியாகிய கடலில் நாம் சிக்கித் தவித்து வாடுகிறோம்.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்"

என்பது மணிமேகலை. பிறவியாகிய கடலைக் கடக்கவேண்டுமானால் இறைவன் திருவடியாகிய தெப்பத்தில் ஏறிக்கொள்ள வேண்டும் என்பதைத் திருவள்ளுவர்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்ற குறளில் உணர்த்தியிருக்கின்றார்.

இறைவர் திருவடியாகிய தெப்பத்தைப் பற்றிக் கொள்ளாவிடில் மாணிக்க வாசகர் தம் திருவாசகத்தில் பாடியுள்ளபடி

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து"

வாட வேண்டியது தான்.

மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் ஒரு வாசகம் இக்கருத்தை இவ்விதமே தெளிவுபடுத்துகிறது. அப்பொன்வாசகம் வருமாறு.

"மருவினிய மலர்ப் பாதம்
மனத்தில் வளர்ந்து உள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச்
சிவபெருமான் என்றேத்திப்
பெருகிய நின் பரங் கருணைத்
தடங்கடலில் படிவாமாறு
அருள்எனக் கிங்கு இடைமருதே
இடங்கொண்ட அம்மானே"

தைப்பூச நன்னாளில் தெப்பவிழாக்களை நிகழ்த்தி ஈசருடைய திருவடிகளைச் சிக்கெனப் பிடித்துக் கொள்வோம்.

தெப்போற்சவம் உணர்த்தும் தத்துவம்

முத்தியின்பம் பெற வேண்டுமானால் இறைவன் திருவடியாகிய தெப்பத்தைப் பற்றிக் கொள்ளவேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்திடும் பொருட்டே தைப்பூச நன்னாளில் தெப்போற்சவங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன என்பதை நாம் தெளிந்து கொள்ளவேண்டும்.



மகாபாரதம்

முனைவர் த. அமிர்தலிங்கம்

9

வயோதிக அந்தணனின் வாடிய தோற்றத்தைக் கண்டதுமே, யாசகத்திற்காகத் தான் வந்திருக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகெள்ளும் வாயிற்காவலன், "இத்தனை நேரமும் வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்கிய வள்ளல் கர்ணன், இப்பொழுதுதான் அரண்மனைக்குள்ளே சென்றார்" என்று கூற, "நானும் அதிகாலையில் தான் புறப்பட்டேன். நடக்க முடியாத காரணத்தால் இங்கு வர இவ்வளவு காலம் ஆகிவிட்டது" என்பதாக அந்தண இந்திரன், தன் தாமதத்திற்கான பொய்க் காரணத்தையும் பொருத்தமாகவே எடுத்துரைக்கிறார்.

கர்ணவள்ளலின் வான் கொடைக்குக் காலதாமதம் ஒரு தடையே இல்லை. வாயிற்காவலர்கள் மூலமாக ஒரு வயோதிக அந்தணர் யாசகத்திற்காக வந்திருப்பதைக் கேள்விப்பட்டு கர்ணனே, வாசல் வரை வந்து வரவேற்பதோடு, அவரைப் பொன்னாசனத் திலேயும் அமர்த்தி அன்புடனே பார்த்து "என்ன வேண்டுமானாலும் கேளுங்கள், தருகிறேன்" என்பதாக உறுதி கூறுகிறான்.

"எனக்கு விருப்பமானதைக் கொடுப்பது என்பது கற்பக விருட்சத்திற்கும் கடினமாயிற்றே!" என்பதாகக் கூறி தனக்கு வேண்டியதைக் கேட்பதற்குத் தயக்கம் காட்டுகின்றான் கிழவேதியன். உடனே, கர்ணனும், "தயக்கம் வேண்டாம், என்னுயிரையே நீர் கொடுக்கும் படி கேட்டாலும் கூட மனமகிழ்வோடு தருகிறேன் நான். அப்படிக் கொடுக்காவிட்டால் போரிலே புறமுதுகு காட்டுகிறவன் போய்ச் சேருகிற நரகம் எனக்கு வாய்க்கட்டும்" என்பதாகச் சத்தியமும் செய்கின்றான்.

கர்ணனின் கொடையை இதுவரை எவரும் சந்தேகித்தது இல்லை; அந்தணனுக்கு அத்தகைய ஒரு சந்தேகம் வந்துவிட்டதே என வருத்தம் கொண்ட வள்ளல் கர்ணன், தான் கேட்டது கொடுக்காவிட்டால் வீரம் இல்லாத கோழைகள் போரில் புறமுதுகிட்டுப் போய் அடையும் நரகத்திற்கு நானும் போகக் கடவேன் என்பதாகச் சத்தியம் செய்து "**நீ மெய்யுயிர் விழைந்திரந்தாலும் கருத்தினோடு உனக்களித்திலேன் எனில் எதிர் கறுத்தவர் கண்ணினை சிவப்ப, உருத்த போரினிற் புறந்தரு நிருபர் போயுறு பவம் உறுவன்**" என்று தான் பெரிதும் மதிக்கும் தன்னுடைய வீரத்தையே சான்று காட்டி கர்ணன் சத்தியம் செய்து தருவதைப் பாராட்டும் விதத்தில் தான்,

"**போர்தலை மிகுந்த ஈரைம் பதின்மரோடு**
துப்புத்துறைபோகிய துணிவுடை ஆண்மை
அக்குரன் அனையகை வண்மையையே" (பதி : 12)



என்று பதிற்றுப்பத்து என்ற சங்க இலக்கியமும் கர்ணனுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிப்பதைக் காண்கிறோம்.

காலையில் பார்த்துக்கேட்கிற போது மாலையில் தருவதாக உறுதிகூறி வரச்சொல்லும் வள்ளல்கள் பலர், மாலையில்

போய்ப்பார்த்துக் கேட்கிறபோது தம் வார்த்தையைத் தாமே மறுத்து ஏய்க்கும் கலியுகத்திலே வாழ்கிறோம் நாம், ஔவையாரும் கூட அத்தகைய கஞ்ச வள்ளல் ஒருவனிடம் கால்கடுக்க நடந்து தாம் பெற்ற அனுபவத்தை

"கரியாகிப் பரியாகிக் காரெருமைதானாய்
எருதாய் முழப்புடவை யாகித் - திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்து கால் ஓய்ந்ததே
கோரைக் கால் ஆழ்வான் கொடை"

எனப்பாடியிருப்பதைப் படிக்கிறோம். அண்மைக் காலத்திலே வறுமையில் வாடிய புலவர் ஒருவர், தமக்கு வாழ்வு கிடைக்கும் என நம்பி வள்ளல் எனப்பெயர் பூண்டு விளங்கிய போலிவள்ளல் ஒருவனைப் போய்ப் பார்த்து அவனைப் பலவாறு புகழ்ந்துரைத்தார். புலவர், "அறிஞர்க் கெல்லாம் அறிஞரே" என்று புகழ, வள்ளலும் தம் பணியாளைப் பார்த்து "இவருக்கு தங்கச் சங்கிலி கொண்டு வந்து தா" என்று கட்டளையிட்டார். "மன்னர்களுக்கெல்லாம் நீங்களே மாமன்னர்" என்று புலவர் மேலும் புகழ, வள்ளலும் தம் பணியாளிடம் "இவருக்கு ஒரு வீட்டையும் எழுதிக் கொடுங்கள்" என்றார். வள்ளலின் கட்டளைகளால் எல்லைமீறிய மகிழ்ச்சிகொண்ட புலவர் "உங்களைப் போல் ஒரு குணவானைப் பார்த்ததே இல்லை" என்பதாகப் புகழ்ந்தார். உடனே வள்ளல் "புலவர் போகும் போது நடந்தா போவார்! ஒரு வண்டி ஏற்பாடு செய்யுங்கள்" என்றும் ஆணையிட்டார்.

வள்ளலின் ஆணைக்கேற்ப வாகனம் வரும், வீட்டுப்பத்திரம் வரும், என்பதாகப் புலவர் கற்பனையில் மிதந்து கொண்டிருக்க, வள்ளல் ஆணையிட்ட ஒன்று கூட அவரைத் தேடி வரவில்லை. பொழுது போகப் போக, புலவருக்குப் பசியும் ஏறஏற, பொறுமை மீறிய புலவர் வள்ளலிடம் "ஐயா, தாங்கள் ஆணையிட்ட ஒன்றையும் கூட தங்கள் பணியாட்கள் கொண்டு வந்து தரவில்லையே" என்பதாக முறையிட்டார்.

அதற்கு அந்த வள்ளல் சொன்னாராம். "எப்படி அவர்கள் கொண்டு வந்து தருவார்கள்? என்னுடைய காதுகளுக்கு இதமாக நீங்கள் சில வார்த்தைகளைச் சொன்னீர்கள். உங்களுடைய காதுகளுக்கும் இதமாக இருக்கட்டுமே என்று நானும் சில வார்த்தைகளைச் சொன்னேன்" என்று கூறிப் புலவரை அதிர்ச்சியுறச் செய்தாராம். வள்ளலிடம் ஏமாந்த அந்த வயிற்றெரிச்சல் தாளாமல் புலவர், தம் குற்றத்தைத் தாமே நொந்து பாடியதைப் போல அமைந்திருக்கும் கீழ்கண்ட பாடலை நீங்களும் தான் படித்துப்பாருங்களேன்!

"கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்
காடெறியும் மறவனைநான் நாடாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியேறு என்றேன்
மல்லாரும் புயனென்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை என்றான்
யானுமென்றன் குற்றத்தால் ஏகின்றேனே!"

இப்படிப்பட்ட போலிகள் வாழக்கூடிய கலியுகத்திலே வாழக்கூடிய நமக்கு, துவாபர யுகத்திலே வாழ்ந்து விளங்கிய கர்ணனின் கொடைப் பெருமையைப் புரிந்து கொள்வது கடினம் தான். "உயிரைக் கேட்டாலும் உறுதியாய்க் கொடுப்பேன்" என்று சத்தியம் செய்து தரக்கூடிய வள்ளல்களை இன்றைக்கு நாம் உலகில் எங்குமே காணமுடியாது. ஆனால் அசத்தியம் செய்து தருவதில் வல்லவனாகிய துரியோதனனுக்கு உற்ற நண்பனாக விளங்கினாலும் கூட கர்ணன், கேட்டதைத் தருவதாக வயோதிக அந்தணனுக்கு சத்தியம் செய்து தருவதோடு அவ்வயோதிகன் "கவச குண்டலங்கள் தரவேண்டும்" என்று கேட்க "இதோ தருகிறேன், பெற்றுக் கொள்க" என்பதாகத் தன் சத்தியத்தில் - கொடையில் உறுதியாக திகழ்கிறான் என்றால் அந்த உத்தம குணத்தை எப்படிப்பாராட்டுவது என்பது தான் தெரியவில்லை.

தன் மார்போடு ஒட்டியிருக்கும் கவசத்தையும், காதுகளோடு ஒட்டியிருக்கும் குண்டலங்களையும், வாள்கொண்டு அரிந்துதான், கர்ணன் அவற்றை எடுத்து தந்தாக வேண்டும், மனமகிழ்ச்சியோடு, உடல் துன்பத்தையும் பொறுத்துக் கொண்டு அவற்றை வாள் கொண்டு துணிக்க முற்படுகிறான் கர்ணன். அப்பொழுது ஒரு அசரீரீ முழங்குகிறது. "கர்ணா! வந்திருப்பவன் அமரர் தலைவன் ஆகிய இந்திரன், கண்ணனின் ஏவலால் வேடம் பூண்டு வந்திருக்கிறான். கவச குண்டலங்களை வழங்காதே! வழங்கினால் உன் உயிருக்கே ஆபத்து! " - இப்படி அந்த அசரீரீ முழங்குகிறது.

அந்த அசரீரீக்குரல், ஆகாயத்திலிருந்து ஒலித்த கதிரவனின் குரலேயாகும். மகனுக்கு நன்மை வேண்டி, அர்ச்சுனனின் தந்தை கவசகுண்டலங் களைக் கவர முற்படும்போது, கர்ணனாகிய தன் மகனுக்கு நன்மை வேண்டி கதிரவன் தடுக்காமல் இருப்பானா? தடுக்கிறான்.

"உயிருக்கு ஆபத்து. கவசகுண்டலங்களை வழங்காதே!" எனக் கூறித்தடுக்கிறான். கதிரவன், ஆனால் வந்திருப்பவன் வஞ்சக வேடதாரியாகிய இந்திரன் என்பது தெரிந்த பிறகும் கூட, கதிரவன் தடுத்த பிறகும் கூட புன் முறுவல் பூத்த முகத்தோடு கர்ணன் உடைவாளால் மார்புக் கவசத்தையும், காது குண்டலங்களையும் அறுத்து வந்து அர்ப்பணிக் கிறான் என்றால், அவன் பெருமையைப் போற்றித்தான் வான்புகழ் வள்ளுவப் பெருமான் பாடிவைத்தாரோ!

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

என்ற திருக்குறள்.

"வந்த அந்தணன் கவச குண்டலங்களை வாங்கி நீ
வழங்கெனக் கென்னத்
தந்தனன் பெறுக என அவன் வழங்க
விண்டலத்திலோர் தனியசரிரீ
இந்திரன்தனை விரகினான் மாயவன் ஏவினான்
வழங்கல் நீ எனவும்
சிந்தையின்கண் கலக்கமற்று அளித்தனன்
செஞ்சுடர்த் தினகரன் சிறுவன்"
(கிருட்டிணன் தூது 242)

என்ற வில்லிபாரதப் பாடலால் கர்ணனின் அளப்பரும் கொடைப் பெருமையை நாம் அறிந்து வியக்கிறோம்.

இந்திரனுக்கு இதுவரை தான் அமரர் தலைவன் என்ற இறுமாப்பு இருந்தது. கர்ணன் வெறும் அங்கநாட்டை ஆளக்கூடிய குறுநில மன்னன்தானே என்ற தாழ்வுணர்ச்சியும் இருந்ததால் தான், தாழ்ந்தவன் ஒருவனிடம் உயர்ந்தவன் ஆகிய நான் எப்படி சுயஉருவில் போய் யாசிப்பது என்பதாக எண்ணி, வயோதிக அந்தணனாக வேடம் மாற்றி வந்து யாசித்தான். அசரீரீ குரல் தடுத்த போதும் அதன் அறிவுரையை மதிக்காது, தன் வள்ளண்மையையே மதித்து கர்ணன் கவச குண்டலங்களை அறுத்து வந்து அர்ப்பணித்தவுடன், கர்ணன் எட்டாத உயரத்திற்கு உயர்ந்து விட்டதை உணர்ந்து கொள்ளும் இந்திரன், தான் அவன் முன் மிகவும் எளியனாகி விட்டதையும் தெளிகிறான்.

உடனே தன்னுடைய சுய உருவை எடுத்துக்கொள்ளும் இந்திரன் கர்ணனிடம் அவன் அற்புதக் கொடையை நெஞ்சாரப் போற்றி அதனை ஏற்றுக் கொள்கிறான். கர்ணனின் மாபெரும் வள்ளல் தன்மையை பாராட்டு முகத்தான் தானும் ஒரு அற்புத வேலினை வரவழைத்து "கர்ணா! இக்கொற்ற வேலினைப் பெற்றுக் கொள். அர்ச்சுனன் மேல் இவ்வேலை நீ ஏவினால் அது பயன்படாது, கடோற்கஜன் மேல் நீ ஏவுவாய் ஆனால் அவன் உயிரை இவ்வேல் உண்டுவிடும்" என்பதாகக் கூறி வழங்க கர்ண வள்ளலும் அவ்வேலினை வணங்கிப் பெற்றுக் கொள்கிறான்.

கடோற்கஜன் என்ற பெயரைச் சொன்னாலே வீரம் வரக்கூடிய அளவிற்கு அப்பெயரில் ஒரு கம்பீரம் இருப்பதைக் காணலாம். கடோற்கஜன் வீமனுடைய மகன், துரியோதனன் அரக்கு மாளிகை அமைத்துப் பாண்டவர்களை அழிக்க முற்பட்டபோது மிக பலவானாகிய வீமசேனன் தன் உடன் பிறந்தோரையும் தாயையும் காப்பாற்றி, இடும்பவனம் என்ற காட்டிற்கு அழைத்துச்

எது சமயம்?

மனித இனத்திற்குச் செய்யும் சேவையே, இன்னும் சொல்லப் போனால் உயிர்ராசி அனைத்துக்கும் செய்யும் சேவையே எனக்குச் சமயமாகும்.

- மகாத்மாகாந்தி

செல்லும் போது, அவ்வனத்திலே வாழ்ந்திருந்த இடும்பன் என்ற அரக்கனைக் கொன்று, அவன் தங்கையாகிய இடும்பி என்ற அரக்கி ஆசையால் வேண்ட, அவளை மணந்து பின் ஈன்றெடுத்த வீரக் காளைதான் கடோற்கஜன்.

அவனுடைய வீரமும் தீரமும் மகாபாரத்தில் மாற்றாரும் மெச்சத்தக்கதாய் அமைந்திருப்ப தாகும். அத்தகு மாபெரும் வீரனைக் கொல்ல வல்லதான கொற்றவேலைத்தான், கர்ணனுக்கு மனம் உவந்து வழங்குகிறான் இந்திரன். கர்ணன் கவச குண்டலங்களை இந்திரனுக்கு வழங்கி அர்ச்சுனன் கையால் மாள வேண்டும் என்பதும், வீரதீர பராக்கிரமசாலியான கடோற்கஜன் இந்திரனுடைய வேலால், கர்ணனால் கொல்லப்பட வேண்டும் என்பதும் விதியே போலும்! விதியின் நாயகன் விளையாட்டை யார்தான் மீற முடியும்?

கர்ணனின் கவச குண்டலங்களைப் பெற்றுக் கொண்டுவிட்ட இந்திரன் கண்ணனை அடைந்து, நடந்தவற்றையெல்லாம் மனம் நெகிழ எடுத்துரைக்கிறான். கர்ணனின் கொடைத் திறத்தால் தாமும் மனம் நெகிழ்ந்து போகும் கண்ணபெருமான் நெருங்கிய உறவினர்கள் வந்து கெஞ்சினாலும் அற்பப் பொருளைக் கொடுப்பதற்கும் தயங்குகின்ற பலர் வாழ்கின்ற இந்த பூமியில், எதிரிகளின் எத்தகைய சிறந்த ஆயுதமும் வந்து தாக்காமல் காக்கக்கூடிய கவச குண்டலங்களை மனமுவந்து ஈந்த கர்ணனின் பெருமைக்கு ஈடே இல்லை. கொடையாளர்கள் தம்முயிரைப் பகைவர் கேட்டாலும் மறுக்காமல் கொடுப்பார்கள் என்பதாக கர்ணனைப் புகழ்ந்துரைத்து இந்திரனுக்கு விடை கொடுத்து அனுப்புகிறார்.

"கர்ணனின் கவச குண்டலங்களைத்தான் பெற்றுக் கொண்டு விட்டோமே! இது போதும்" என்பதாக பரந்தாமனின் நெஞ்சம் அத்துடன் திருப்தி கொண்டதா என்றால் இல்லை. அவர் குந்திதேவியின் வீட்டிற்கு மறுபடியும் போய், "கர்ணனுடைய வீட்டிற்கு உடனே நீ போய், நான் ஏவிய காரியத்தைச் செய்து முடிப்பாயாக" என்று குந்தியை கர்ணனின் வீட்டிற்குச் செல்லுமாறு விரைவுப்படுத்துகிறார்.

தொடரும்...

உலகுக்கு நலம் தரும் ஒரு மந்திரம்

- சு. குஞ்சிதபாதம்,
திருவாவடுதுறை ஆதீனப்புலவர்

மந்திரத்தால் மாங்காய் காய்க்குமா என்பார்கள். எத்தனையோ சிறந்த பொருள் கொண்ட சொற்கள் திரித்து வழங்கக் காண்கின்றோம். மந்திரம் என்பது சொல்பவனைக் காப்பது என்னும் பொருள்தரும்.

உண்மையான ஈடுபாட்டோடு ஓதினால் ஓதுபவனை மட்டுமல்ல. அந்தப்புண்ணியத்தால் உலகத்தையே காக்கக்கூடிய மந்திரம் ஒன்று உள்ளது. அந்த மந்திரமே திருமூலர் அருளிய திருமந்திரமாகும்.

இந்த அபூர்வ மந்திரம் உதயமான இடம் எது தெரியுமா? திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் விளங்கும் தெய்வீகத்தலமாகிய திருவாவடுதுறைதான். ஆதினப் பராமரிப்பில் விளங்கும் திருவாவடுதுறை கோமுக்தீசுவரர் சிவாலயத்தில் திருமந்திரம் அருளிய திருமூலருக்குச் சிறந்த சந்நிதி உள்ளது.

ஆண்டு தோறும் ஆதீன குருமுதல்வர் அருள்திரு நமசிவாயமூர்த்திகளின் மகரத்தலைநாள் குருபூசை விழாவன்று, ஆதீனத்து 23-வது அருட்பீடத்தில் எழுந்தருளியிருக்கும் சீர்வளர்ச்சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் திருமந்திரம் நூலை வெளியிட்டு ஆன்மீக உணர்வைத் தழைக்கச் செய்து வருகின்றார்கள்.

மகரத்தலைநாள் குருபூசை விழாவுக்கான திருமுகம் வாசிக்கும் நன்னாளில் திருமந்திரத்துள் ஐந்து, ஆறு ஆகிய இரண்டு தந்திரங்களைச் சீர்வளர்சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் வெளியிட்டருளினார்கள். ஒன்பது தந்திரங்களாக விளங்கும் திருமந்திர நூலின் ஐந்து,ஆறாம் தந்திரங்கள் குறித்துச் சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

மேன்மைகொள் சைவநீதி எனப்போற்றப்பெறும் சைவ சமயம் நான்கு பகுப்புகளாக விளங்கும் பாங்கினை விளக்கிச் சொல்வது ஐந்தாம் தந்திரம். உலகத் தலைவனாகிய சிவபெருமான் சாதி, இன பேதமின்றி, உலகிலுள்ள அனைவருமே படைத்துக் கொடுத்த உன்னத நெறியே சைவசமயம் என்று ஐந்தாம் தந்திரம் கூறுகிறது.

"சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வைய்த்துள் உளார்க்கு வகுத்துரைத் தானே"
(1478)

என்பது அந்தக் கருத்தினைக் கூறும் அற்புதமான பாடலாகும்.

"சைவ சமயத்தின் கொள்கை சைவ சித்தாந்தம் எனப்படும். சைவசித்தாந்தக் கொள்கை நெறியில் நிற்போர் சைவசித்தாந்தர் எனப்படுவர்". சைவ சித்தாந்தராவார் எப்படிப்பட்டவர்கள் என்று விளக்கிச் சொல்லும் பாடல் இந்த ஐந்தாம் தந்திரத்துள் அமைந்துள்ளது. அப்பாடல் கருத்தை அறிந்து கொண்டால் சைவசித்தாந்தக் கருத்தின் மேன்மையும், சைவ சிந்தாந்தரின் சீர்மையும் செம்மையாகப் புலப்படும்.

சைவ சித்தாந்தர் என்பவர்களுக்கு இருக்க வேண்டிய முதல் தகுதி என்னவென்று திருமூலர் கூறுகிறார். கற்க வேண்டிய மெய்ஞ்ஞான நூல்களைக் கசடறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்று அந்நூல்களில் விதிக்கப்பட்ட வண்ணம் இறைவனோடு இணைய வேண்டிய யோக நெறியில் பயில வேண்டும்.

அவ்வாறு யோக நெறியில் பயின்றால் ஞானம் சித்திக்கும். இந்த ஞானம் சாதாரண ஞானம் அல்ல. மேலான சிவஞானம் ஆகும். இதுவே பிறப்பு இறப்புகளிலிருந்து ஆன்மாக்களாகிய நம்மை விடுவித்துப் பேரின்பம் தரும் மெய்ஞ்ஞானமாகும். இந்த ஞானமே ஆன்மாவை இறைவனாகிய சிவத்தோடு இரண்டற இணைத்து சிவமயமாக்குவது ஆகும்.

இந்த உண்மை வேத உபநிடதங்களில் ஒரு வாக்கியமாக உணர்த்தப்படுகிறது. அந்த வாக்கியம் மகா வாக்கியம் எனப்படும். அது "தத் த்வம் அஸி" என்னும் வாக்கியம். "தத்" என்பது

சிவம், "த்வம்" என்பது ஆன்மா, "அஸி" என்பது ஆகிறது என்று கருத்துப்படும். அது நீ ஆகிறாய் என்று பொருள் தந்து அந்தச் சிவமாக ஆன்மாவாகிய நீ ஆகிறாய் என்பது பொருள் ஆக உள்ளது.

சைவசித்தாந்தர் என்பவர் இந்த மகா வாக்கியத்தின் தத் பதப்பொருளாகிய சிவத்தையும், த்வம் பதப்பொருளாகிய ஆன்மாவையும் (தன்னையும்), அஸி பதப்பொருளால் அவ்வாறு தன்னை சிவமாக்கிய அருளையும் உணர்ந்து சிவத்தோடு இரண்டறக் கலந்திருப்பவர் ஆவர் என்று திருமூல நாயனார் அருளிச் செய்கிறார்.

இதன் மூலம் "**சைவ சித்தாந்தம் என்பது அறிவு பூர்வமான, துன்பம் நீக்க வல்ல, பெரியதொரு நிரந்தரமான பேற்றினைத் தரவல்ல, அற்புதமான செந்நெறிக் கொள்கை**" என்பது தெளிவாகப் புலனாகிறது அல்லவா. இவ்வாறு சைவ சித்தாந்தத்தின் மேன்மையினை நான்கே அடிகளில் தொகுத்துக் கூறும் இப்பாடல் திருமந்திரத்தின் மணிமகுடம் எனலாம். இந்த அழகிய கருத்தினைக் கூறும் பாடல் இதோ!.

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
தொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித்தாந்தரே *(1421)*

இத்தகைய அருமையான ஐந்தாம் தந்திரத்துள், இந்த மேலான சித்தாந்த அனுபவத்திற்குரிய, நால்வகை நெறிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியன அழகுற விளக்கப்பெற்றுள்ளன. இந்தச் சிறந்த கருத்துக்கள் யாவும் இருபது அதிகாரங்களாகப் பகுக்கப்பெற்று மிளிர்கின்றது ஐந்தாம் தந்திரம்.

இனி அடுத்து அமைந்துள்ள ஆறாம் தந்திரம் சிவகுரு தரிசனம் முதலாகப் பக்குவ சீடன் இறுதியாகப் பதினான்கு அதிகாரங்களைப் பெற்றுப் பாங்குறத் திகழ்கிறது. சிவபெருமான் ஆன்மாக்களின் மீது வைத்த கைம்மாறு வேண்டாக் கருணையால், குருவாக எழுந்தருளி வந்து மும்மலம் நீக்கி, செம்மலர்ப்பாதம் தந்து ஆட்கொள்வான் என்ற உண்மை நன்கு விளக்கமாகக் கூறப்பெற்றுள்ளது. ஞாதிரு, ஞானம், ஞேயம் போன்ற அரிய தத்துவச் செய்திகள் தத்துவ ஞான ஆர்வம் உடையோருக்கு நல்ல விருந்து.

சிவவேடம் என்னும் பகுதியில் ஞானவேடம் தாங்கிச் சிவநெறியில் நிற்போர் சிவமாம் தன்மை அடைவர் என்பது உணர்த்தப்பெறுகிறது.

பக்குவ சீடனைப் பற்றிக் குறிப்பிடும் போது, அச்சீடனானவன் ஞான குருவின் திருவடிகளை நிழல்போலப் பிரியாமல் விளங்குவான் என்று திருமூல நாயனார் அருளியிருப்பது ஆழ்ந்து அனுபவித்து மகிழ்வதற்குரியது.

இவ்வாறு சாத்திரமாகவும், தோத்திரமாகவும், சமுதாய நல்வழிகாட்டும் சன்மார்க்க பெருநூலாகவும் திகழக்கூடிய திருமூலர் திருமந்திரத்தின் 5-ஆம், 6-ஆம் தந்திரங்களை, மகரத்தலைநாள் குருபூசைக்குரிய திருமுக நன்னாளாம் *(24.11.2004)* கார்த்திகை அசுபதி திருநாளில், சீர்வளர்சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் வெளியிட்டருளி, அவை குறித்த சிந்தனைகளைச் சொற்பொழிவாகவும் நிகழ்வித்துக் குருவருள் பாலித்தார்கள்.

மக்கள் யாவரும் மந்திரம் என்ற சொல் கேட்டுத் திகைக்காமல், திருமந்திர நன்னூல் கூறும் கருத்துக்களைத் தாரக மந்திரமாகக் கொண்டு ஞானநெறி நோக்கி உயர எந்தத்தடையுமில்லை. எல்லா நல்ல முயற்சிகளுக்கும் திருவருள் துணை நிற்பது உறுதி அல்லவா?

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 23ஆவது குருமகா சன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை.

அன்புடையீர்!
திருவருள்சிறக்க.
தங்கள் திருக்கோயில் பத்திரிகை நலம் பயக்கும் பலசெய்திகளுடன் ஆன்மீக மணம் பரப்பிவருதல் பாராட்டுக்குரியது.
தங்கள் பத்திரிகையின் தெய்வீகப் பணிகள் மேன்மேலும் தழைத்துச் சிறந்திட நல்வாழ்த்துக்கள்

திருக்கோயில்
திங்கள் இதழ்

சந்தா விவரம்

தனி இதழின் விலை	- ரூ.	10/-
ஓராண்டுச் சந்தா	- ரூ.	120/-
பத்து ஆண்டுச் சந்தா	- ரூ.	1000/-
ஆயுட்காலச் சந்தா	- ரூ.	1500/-

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

விளம்பரக் கட்டண விவரம்

1.	பின் பக்க அட்டை வெளிபுறம் (வண்ணத்தில்)	ரூ. 25,000/-
1.	முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ. 12,000/-
2.	பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ. 10,000/-
3.	உள்புறம் முழுப்பக்கம்	ரூ. 5,000/-
4.	உள்புறம் அரைப்பக்கம்	ரூ. 3,000/-

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை-600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

வானக்குயிலாய்ப் பறந்த கானக்குயில்

- நாதப்பிரம்மம்
குன்னக்குடி வைத்தியநாதன்
செயலாளர்,
தமிழ்நாடு இயல்இசை நாடக மன்றம்

வைரங்களில் சிறந்தது ரத்தினம். விருதுகளில் சிறந்தது பாரத ரத்னா. இசை உலகிலே இசை பிறந்த நாள் முதல் இந்த மண்ணில் உதித்த பல இசை வல்லுநர்கள் நமது தமிழ் மண்ணுக்கு சங்கீத சாம்ராஜ்யத்தை ஆண்டு அனுபவித்து நமக்கு விட்டுச் சென்றாலும் புகழுடன் அவர்கள் இசை உலகிற்கு சேவை செய்து மறைந்து அமரர்களாகி நமக்கெல்லாம் தெய்வங்களாக காட்சி தந்தவர்களில், இந்த புனிதமான தமிழ் மண்ணில் பிறந்து தென்பாண்டி நாடான மதுரை என்னும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருத்தலத்தில் பிறந்து, சதாசிவம் என்பவரின் திருவாட்டியாக அமைந்து, ஆதிபராசக்தியின் அனுக்கிரகத்தைப் பெற்று, கர்நாடக சங்கீத உலகிற்கு மாபெரும் இசை மேதாவியாக விளங்கி, பற்பல நாட்டவர் களும் போற்றிப் புகழும் நற்பெயரைத் தன்னுள் அடக்கி, பாரதத்திலேயே சிறந்த கண் மணியாக விளங்கிய பெண்மணி தான் பாரதரத்னா எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள்.

மண்ணுலகில் அவர் வளமான வாழ்க்கையை நலமாக நடத்திடும் காலங்களில் இசை உலகத்திற்கு சேவை செய்தது மட்டுமல்லாமல் இறைவன்பால் அவர்கள் கொண்ட பக்திக்கு எல்லையே இல்லை. இனிய சுபாவம் கொண்டவர். எளிமையாக இருப்பவர்களிடம் கூட நளினமாக பேசும் நயமான சுபாவம் கொண்டவர். காட்சிக்கு எளியவராக காட்சியளிக்கும் அவர் சங்கீத சாஸ்திரத்திற்கே சாட்சியானவர். இவருடைய பூரண பக்தியின் காரணமாக அனைத்து தெய்வங்களும் இவருடைய சாரீரத்திற்குச் சக்தியை தந்தன. தளராத பக்தியின் காரணமாக வளமான சக்தியை பெற்றவர் தான் எம்.எஸ். அவர்கள்.

அவர் ஒரு இசைக் கச்சேரிக்கு வந்தார் என்றால் அந்த அரங்கிலே தெய்வீக, மணம் வீசும். மேடையில் அமர்ந்து பாடத் தொடங்கிவிட்டால் சங்கீத தேவியான சகலகலாவல்லி, இவருடைய குரலுக்கு, அதன் மூலமாக ஒலிக்கும் நாதத்திற்கு ஸ்ருதி சுத்தம் என்னும் ஓம்கார வைபவத்தையும், அரங்கத்தில் இருப்பவர்களின் காதுகளில் தேன் குரலால் பாடும் சங்கீத சாகித்தியங்களை ரீங்காரம் செய்ய வைத்து விடுவார் சரஸ்வதி. இவர் பாடும் ராகத்திலே அருளும், அனுக்கிரகப்பூர்வமான குருநாதரின் ஆசியும் என்றென்றும் நிலைத்திருந்தது அவருக்கு கிடைத்த நற்பயன். புகழ் என்ற பெயருக்கு இன்னொரு பெயர் சூட்டவேண்டுமென்றால் அது எம்.எஸ். சுப்புலட்சுமி என்று மட்டும் சொல்லலாம். இவருடைய பூரண புகழுக்கு, புலமைக்கு வளமாக, நலமாக, திடமாக, கூடவேயிருந்து, இந்த சங்கீத உலகில் முழுமையான பிரகாசத்துடன் முதலாவது இசைக்கலைஞராக இவர் வருவார் என்று தீர்க்கதரிசியாக இருந்த அவர்தம் கணவர் சதாசிவம் அவர்களை சாட்சாத் சர்வேஸ்வரனின் மறுஉருவம் என்ற சொல்லலாம்.

அவர் அமரர் ஆகிவிட்ட நாளிலிருந்து அம்மா அவர்களின் மனம் மிகவும் துயருற்று நோயால் பீடிக்கப்பட்டு வருந்திய நிலையில் வரப்பிரசாதம் பெற்ற அந்த அம்மா தன் வாயால் பாடுவதைக் கூட குறைத்துக் கொண்டார். யாருக்கு நஷ்டமோ கஷ்டமோ அதைப்பற்றி நாம் நினைப்போமானால் சத்தியமாக சொல்கிறேன் சங்கீத உலகிற்கு தான் நஷ்டமும், கஷ்டமும்.

பல மகாராஜாக்கள் தங்களுடைய காலங்களில் ஆட்சி செய்வதை அந்த தேசங்களில் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும், பதிவேடுகளிலும் பொன்னான எழுத்துக்களால் வடித்து வைத்திருப்பார்கள். அந்த வகையில் இந்த சங்கீத சக்கரவர்த்தியினை, இன்னிசை மகாராணி சங்கீத சாம்ராஜ்யத்தில் ஆட்சி செய்த நேரத்தில் என்றுமே அழிக்கமுடியாத சப்தஸ்வர வரிசைகளில் உருவான வலுவான ராகங்களின் மூலமாக தெளிவான உச்சரிப்புகள் கணீர் என்று ஒலிக்க மந்திர சக்திகளைக் கொண்ட மகா விஷ்ணுவின் தோத்திரமாம் விஷ்ணு சகஸ்ரநாமத்தையும் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து இவரின் புகழை பூபாலத்தில் பாடிக்கொண்டே இருக்க வேண்டும் என்று இறைவன் நினைத்தானோ என்னமோ அதன்காரணமாக யுக யுகாந்திரம் வரை இவர்தம் குரலில் ஒலித்துக்கொண்டே இருக்கும் சுப்ரபாதத்தை அந்த திருப்பதி வெங்கடேச பெருமாளுக்கே அர்ப்பணமாக செய்து அகில உலகமும் புகழும் இசைக் கலைஞராக வாழ்ந்து காட்டிய, இசைக்கலைக்கு வரப்பிரசாதமாக அமைந்த பல மகான்களின் நல்லாசிகளைப் பெற்றுக் கீர்த்திமிக்க பெண்ணரசியாக வாழ்ந்தவர் தான் பாரதரத்னா சங்கீத கலாநிதி எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள்.

நம்மிடையே அவர்தம் இசைப் புலமையால் கானக்குயிலாக இருந்த அவர் சிறகடித்து பறந்துவிட்டார் வானக்குயிலாய். மூச்சுக்காற்று தான் நின்றதே தவிர அவர் நமக்கு விட்டுச்சென்ற கீதம் என்றென்றும் நமது காதுகளில் ஒலிக்கும் காற்றினிலே வரும் கீதம். அமரர் பாரத ரத்னா எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களை இந்த உலகம் உள்ள வரை மறக்க மாட்டார்கள். அவரை நினைத்து வணங்குவார்கள்.

★

கடமை தவறா கருநிறத்தான்



ஜோதிடச் சக்கரவர்த்தி
ஏ.எம். ராஜகோபாலன்

சனிபகவானின் சக்தியும், பெருமையும்

உலகில் நியாயம் எதுவும் இல்லாமல், பழியை சுமப்பவர்கள் பலர் உண்டு. அவர்களில் முதலிடம் நவகிரகங்களில் சூரியனுக்கு அடுத்த படியாக வீரியமும், சக்தியும் வாய்ந்த சனி பகவானுக்குத்தான்!

மானிட வாழ்க்கையில் இரு மிக, மிக முக்கியமான அம்சங்களான ஆயுள், ஜீவனம் (தொழில், வியாபாரம், உத்தியோகம்) ஆகிய இரண்டையும் தனது பிடிக்குள் வைத்திருப்பதால் ஜோதிடக் கலையில் ஆயுள் காரகரும், ஜீவன காரகரும் இவரே.

பாபம் செய்தவர்களை நிர்தாட்சண்யமாக, அளவற்ற கண்டிப்புடன் தண்டிப்பதால் இவரது பெயரைச் சொன்னாலே, அனைவருக்கும் அச்சம்! வெறுப்பு!! சனி என்றாலே, துன்பத்தைக் கொடுப்பவர் என்று பலரும் நினைக்கின்றார்கள் - காலம், காலமாக. ஆனால், இத்தகைய கருத்து உண்மைக்கு புறம்பானது, நியாயமற்றது கூட.

நல்லதையே நினைப்பவர்கள், நல்லதையே செய்பவர்கள், சனிபகவானைப் பற்றி சிறிதளவும், கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில், நற்செயல்களை (புண்ணியம்) செய்பவர்களுக்கு, அளவற்ற நற்பலன்களை அளிப்பவர் சனி பகவான்.

எதற்கெடுத்தாலும், சனி மேல் பழியைப் போடுவது சகஜமாகிவிட்டது. கந்து வட்டிக்கு கடன் வாங்கி விட்டு. "எனக்கு 7½ச் சனி. அது தான் இந்த கடனில் என்னை ஆழ்த்திவிட்டது" என்று கூறுவோர் ஏராளம், ஏராளம். இவர்களை, அநியாய வட்டிக்குக் கடன்வாங்கும் படி சனியா கூறினார்?

மிகப் புராதன ஜோதிட நூல்கள், சனி பகவானின் அளவற்ற சக்தியையும், பெருமையையும், போற்றிப் புகழ்கின்றன. ஜாதகத்தில் பூர்வ புண்ணியஸ்தானம் பலம் பெற்றிருந்தால், சனி பகவான் நீண்ட ஆயுளையும், உயர்ந்த பதவிகளையும், அரசர்களுக்கு உரிய மதிப்பு, மரியாதை ஆகியவற்றையும் அளித்தருள்வார் என்று "பூர்வ பாராசர்யம்" என்ற மிகப் பழமையான ஜோதிட நூல் விளக்கி உள்ளது.

"ஜோதிட ரத்னாகரம்" என்ற மற்றொரு புராதன வடமொழி ஜோதிட கிரந்தம் இன்னும் ஒரு படி மேலேயே சனியைப் புகழ்கிறது. ஒரே இரவில் ஆண்டியை அரசனாகவும், அரசனை ஆண்டியாகவும் மாற்றும் மகத்தான சக்தி பெற்றவர் சனி பகவான் என்று உறுதியாகக் கூறுகிறது அந்நூல்.

ஜாதகத்தில் துலாராசியில் உச்சம் பெற்று, சனிபகவான், ஒருவரது ஜெனன காலத்தில் அமர்ந்திருந்தால், பூரண ஆயுள் நிச்சயம் (100 வயது) என்று, "ஆயுள் நிர்ணய பிரகாரம்" என்ற நூல் அறுதியிட்டுக் கூறுகிறது.

பல சுபகிரகங்கள் பலமாக இருக்கும் போது பூர்வ புண்ணிய ராசியும் சுபபலம் பெற்றிருந்தால் அத்தகைய தருணத்தில் நிகழும் 7½ சனியின் காலத்தில் கூட, அளவற்ற நன்மைகளைத் தந்தருள்வார் சனிபகவான் என்று ஜ்யோதிஷ் கிரந்த்

திருத்தணிகையில் படி உற்சவம்

திருத்தணிகையில் ஒவ்வொரு ஆங்கிலப் புத்தாண்டு அன்றும் படி உற்சவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அன்பர்கள் பலர் கூடி, மலைகளில் உள்ள படிக்கட்டுகள் ஒவ்வொன்றிலும் சுவாமியைப் பற்றிய திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியபடியே மலையேறி, இறைவனை தரிசித்து வழிபடுவதுதான் படி உற்சவம் ஆகும்.

படி உற்சவம் 1918ல் வள்ளிமலை சுவாமிகளால் தொடங்கி வைக்கப்பட்டது.

(கோரக்பூர்) என்ற புகழ் பெற்ற நூல் கூறுகிறது.

சனிபகவானின் திருவுள்ளம் உகந்து, தன் பூரண சக்தியுடன் ஆவிர்பவித்து (தானாகவே தோன்றி), அருள்பாலிக்கும் திருத்தலம் திருநள்ளாறு ஆகும். மா மன்னன் நளனும், அவனது தேவி தமயந்தியும், அவர்களின் குழந்தைகளும் கலியின் கொடுமையினால், மிகக் கொடிய துன்பங்களை அனுபவித்த போது, திருநள்ளாறு திருத்தலம் வந்து, அங்குள்ள புஷ்கரணியில் புனித நீராடி, சனீஸ்வரனைப் பூஜித்து, துன்பங்கள் அனைத்தும் தீர்ந்து மீண்டும் அரச பதவியை அடைந்த நிகழ்ச்சியை ஸ்ரீமத் மஹாபாரதம் விவரித்துள்ளது.

உலகம் அனைத்தையும் கட்டி, ஆளும், மாபெரும் மன்னர்கள் ஆனாலும், தன் கடமையைச் செய்ய சனி தயங்குவதில்லை. ஆதலால் தான், எவருக்கும் அஞ்சாதவர்களாயினும், எதற்கும் அஞ்சாதவர்களாயினும், ஏழரைச்சனி அல்லது அஷ்டமச்சனி அல்லது கண்டச்சனி என்றால் அங்கமெல்லாம் நடுங்கி, திருநள்ளாறு நோக்கி ஓடுகின்றனர்.

இதில் ஓர் ஆச்சரியம் என்னவென்றால், இறைவனே மானிடனாக அவதாரம் செய்து விட்டால், அந்த இறைவனையும் சனி விட்டு வைப்பதில்லை!.

ஏன்? ஆச்சரியமாக இருக்கிறதா?

தங்கத் தலைநகர் துவாரகையில் சனிபகவான்

துவாரகை!

துவாபர யுகத்தில், உலகம் வியக்கும் மாநகர் அது. பொன்னாலும், நவரத்தினங்களினாலும் பிரகாசிக்கும் மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் அரண்மனைகள்.

அதர்மத்தை அழித்து, தர்மத்தைக் காத்தருள்வதற்காக, இறைவனை ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்து, துவாரகையைத் தன் தலைநகராகக் கொண்டு, தன் சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த காலம் அது. உலகப் புகழ்பெற்ற இந்த துவாரகை, தேவனான ***விஸ்வகர்மாவினால்*** நிர்மாணம் செய்யப்பட்டு, சூரியன் ஒளிக்கு சமமான பிரகாசத்தினால் திகழ்ந்த அதிசய நகரம்.

அதன் மத்தியில் தான், தக தக என்று தங்கத் தகடுகள் வேயப்பட்ட கலசங்களுடன் கூட திகழ்ந்தது ஸ்ரீ கண்ணனின் மாபெரும் அரண்மனை.

ஓர் நாள்! அந்த மாநகரத்தின் பிரும்மாண்டமான வாயிலில், கருத்த, குட்டையான, ஆனால் அளவற்ற தேஜஸ் (ஒளிப் பிரகாசம்) ஸுடன் கூடிய ஒருவர் நின்று கொண்டிருந்தார். தலையில் தங்கமான கிரீடம், காதில் மின்னும், அழகிய குண்டலங்கள், மார்பிற்கு அழகு செய்யும் சுவர்ண கவசம், கைகளில் கங்கணங்கள்!.

வாயிற்காவலன் நெருங்கினான், மெள்ள மெள்ள, சனிபகவானை நோக்கி "ஸ்வாமீ! தாங்கள் யாரென்று தெரிந்து கொள்ளலாமா? நெடு நேரமாக கால் கடுக்க நிற்கிறீர்களே!" என்றான். அவனையும் அறியாமல். அவன் உடல் சிறிது நடுங்கியது, நாவும் குழறியது.

ஒரு நிமிடம் அந்த வீரனை, அலட்சியப் பார்வையை செலுத்தி அலசினார். அனைத்து உலகங்ளையும் சக்தியினால் நடுங்க வைக்கும் சனீஸ்வரன்.

தொடரும்...

தனலட்சுமி

வித்யாலட்சுமி

ஆதிலட்சுமி

மகாலட்சுமி - மகாவிஷ்ணு

விஜயலட்சுமி

தான்யலட்சுமி

சந்தானலட்சுமி

தைரியலட்சுமி

கஜலட்சுமி

புத்தாண்டில் அஷ்டலட்சுமியர் திருவருளால் அனைவருக்கும்
அனைத்து நலங்களும், வளங்களும் தழைக்கட்டும்.

அன்புள்ள

ஜி. இராமகிருஷ்ணன் இ. ஆ. ப.,
ஆணையாளர்,

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119 உத்தமர் காந்தி சிலை,
சென்னை - 600 034.

சிறப்பாசிரியர் மற்றும் திருமிகு **ஜி. இராமகிருஷ்ணன்,** இ.ஆ.ப., ஆணையர்,
வெளியிடுவோர் : தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையஆட்சித்துறை, சென்னை - 600 034.தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : இராயப்பேட்டை எழுதுபொருள் அச்சு மற்றும் உபபொருள்கள் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட். சென்னை-14. தொலைபேசி எண் : 28485670

உ
சிவமயம்
ஸ்ரீபாலசித்த குருவே நம :

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் திருமடம்
மயிலம் - 604 304 விழுப்புரம் மாவட்டம்

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் நூல்களை ஒருசேரப் பெற ஓர் அரிய வாய்ப்பு

2 தொகுதிகள் 30 நூல்கள்

1536 பக்கங்களில் முப்பது நூல்கள் அடங்கிய இரண்டு தொகுதிகளின் விலை ரூ.450. இவை இப்போது நூறு ரூபாய் தள்ளுபடியுடன் ரூ.350/-க்கு விற்கப்படுகின்றன.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் மயிலம் பொம்மபுரம் ஆதீன முதன்மைச் சீடர். இவர் மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகளைத் தம் ஞானகுருவாகக் கொண்டு இட்டலிங்க வழிப்பாட்டைப் பின்பற்றிய வீரசைவ அருளாளர்.

அவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டினர். பெரம்பலூரை அடுத்துள்ள துறைமங்கலத்தில் தங்கியிருந்தமையால் துறைமங்கலம் சிவப்பிரகாசர் என்றும், கடலூர் மாவட்டம் நல்லாற்றில் சிவயோக ஜீவசமாதி கூடியமையால் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் என்றும் அழைக்கப்பெறுகிறார்.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளால் நல்லாற்றூரில் சமாதிக் கோயில் எழுப்பப் பெற்று அண்மையில் குடமுழுக்கு நிகழ்த்தப் பெற்றது.

சிவப்பிரகாசர் அருளிய முப்பது நூல்கள், ஆதீன முதற்குரவர் ஸ்ரீ பாலசித்தர் குருபூசைத் திருநாளில் (ஆனி திருவாதிரை 19.06.2004) இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டன.

இத்தொகுதிகளில் தமிழுலகு மிகுதியும் போற்றும் நன்னெறி, நால்வர் நான்மணி மாலை, திருவண்ணாமலையில் கிரிவலம் வந்தபோது சுவாமிகள் பாடிய சோணசைல மாலை, பிரபுலிங்க லீலை முதலியன அடங்கியுள்ளன. மேலும் புராணங்கள் இரண்டு, வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி முதலிய சாத்திர நூல்கள், தருக்க நூல்கள், கோவை,உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்கள் மற்றும் இட்டலிங்க வழிப்பாட்டுக்குரிய தோத்திர நூல்கள் ஆகியன முப்பதும் இப்பதிப்பில் அடங்கியுள்ளன.

இந்நூல்கள் எளிதில் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் பதம்பிரித்துப் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. நூல்களை அஞ்சலில் பெற விரும்புவோர் ரூ.50.-- சேர்த்து அனுப்புக. உரிய தொகையைப் பணவிடையாகவோ, பாண்டிச்சேரியில் மாற்றத்தக்க வகையில் ஆதீனகர்த்தர் (Adheenakarthar,SSBS Thirumadam) பெயரில் எடுக்கப்பெற்ற வங்கி வரைவோலையாகவோ அனுப்புக.

இங்ஙனம்
ஆதீனகர்த்தர்

பதிவு எண் : TN / PMG (CCR) / 707 / 03-05 / WPP No. 451 / 03-05



வருங்காலம் வளமாய் விளங்கிட
வாழ்க்கையில் இன்பம் நிலைத்திட

முதலீடு செய்திட சிறந்த இடம்

பவர் ஃபைனான்ஸ்

முறையான வட்டி வழங்கும் திட்டம் (RIPS)	திரள்வட்டி வழங்கும் திட்டம் (CIPS)
7.23%	**8.35%**
36,48 மற்றும் 60 மாதங்களுக்கு	60 மாதங்களுக்கு

ஒரு ஆண்டிற்கு 7.00% வீதம் மாதாந்திரவட்டி கணக்கிடப்படும்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

189(ப.எண்.84), டி.டி.கே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-600 018.
தொலைபேசி : 2499 7689, 2499 5648, ஃபேக்ஸ் : 044 2498 2894
Visit us at : www.tninfrafinance.com / www.tnpowerfinance.com

உங்கள் பணத்திற்கு முழு பாதுகாப்பு
பவர் ஃபைனான்ஸ்

இந்திய இனிப்புகளின் தனிச் சுவை

அடையார்
ஆனந்த பவன்
ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

• சென்னை ✆ 044 - 2446 0607 • காஞ்சிபுரம் ✆ 0411 - 223 3295
• கோவை ✆ 0422 - 2521919 • பெங்களூர் ✆ 080 - 5128 0909
• ஈரோடு ✆ 0424 - 2267775 • மதுரை ரயில் சந்திப்பு ✆ 0452 - 5377752
• திருச்சி ரயில் சந்திப்பு ✆ 0431 - 2401438